REGD| M| 4642

# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 11–7–48 | இதழ் 4

## மீண்டும் இந்தி

[ தமிழரசன் ]

—✲—

காற்றினும் கூர்வேல் கடுகி வரினும்
கடுஞ்சமர் நடுவே கொடுஞ்சிலை வளைத்தே
இமையாது நின்ற வீரர்களையும்,
அருமைத் தந்தையும் அன்புடைத் தலைவனும்
போரில் இறந்ததையும் காரிகை தெரிந்தும் -
மேலும் மகனை வேலுடன் அனுப்பிய
தாய்மார்களையுப், தன்பால் கொண்ட
தமிழர் நாட்டில் தமிழைப் போற்றித்
தமிழைக் காக்கத் தமிழர் கூட்டம்
தாங்கிய வேலுடன் பாங்குடன் நிற்க,
சிங்கத் தினிடம் பங்கப். பட்ட
சிறுத்தை மீண்டும் சீறுதல் போல
முன்னாள் வந்து மூக்கறு பட்டது
தெரிந்தோ அன்றித் தெரியாத் தனமோ,
இந்தி என்னும் நொந்த மொழி
மீண்டும் இங்கே விளையாட வருகிற
விந்தைதான் இன்னும் விளங்கவே இல்லை.

## மோட்டார் வேகத்தில்

4-ம் பக்கத் தொடர்ச்சி

அதனை விளக்குவதற்குப் புராண இதிகாசங்களையும், இவற்றை உண்டாக்குவதற்கு நம்மவரிலேயே சிலரையும் ஏற்பாடுசெய்திருக்கின்றனரே! தன்னைத்தானே பாதுகாக்க முடியாமல்; தன்னைப்பாதுகாப்பதற்கு மதத்தையும்—புராண இதிகாசங்களையும்—நம்மவரிலேயே சிலரையும் ஏற்பாடு செய்துவைத்துக்கொண்டிருக்கும் ஒரு கடவுள், எங்களை எல்லாம் படைத்துக்காத்து இரட்சிக்கிறார் என்று சொல்லப்படுவதை நாங்கள் எப்படி நம்பமுடியும்—ஒப்புக்கொள்ள முடியும்?" என்று மக்கள் சிந்திக்கும் காலம் இது.

ஆண்டவன் என்றால் அவயவங்கள் அடங்கி—மதம் என்றால் மனம் ஒடுங்கி—என்ன? ஏது? என்று ஒன்றும் கேளாமல் இருந்த நிலைமாறி, ஆண்டவனைப்பற்றியும், மதத்தைப் பற்றியும், மதநூற்களைப்பற்றியும் மக்களிடையே பலதிறப்பட்ட ஐயப்பாடுகள் தோன்றியுள்ள காலம் இது.

இன்றைய உலகம், மதப்போரையால் ஏற்பட்ட இருளில் மயங்கிக்கிடக்கும் சில பழுத்த வைதிகர்களையும் தனது பகுத்தறிவுச்சுடரால் தெளிவு பெறச்செய்து, மத மயக்கத்தை மாற்றி மன்பதையின் மாசற்ற மாணிக்கங்கள் ஆக்கியும், புராணங்களே எங்கள் புகலிடம்—இதிகாசங்களே எங்கள் இருப்பிடம் ஆகமங்களே எங்களுக்கு ஆதரவு—உபநிஷதங்களே எங்களுக்கு உயிர்—தேவாரமே எங்களுக்குத் தென்பு—பிரபந்தமே எங்கள் பேறு என்றெண்ணி இறுமாந்திருந்தவர்களிற் பலரைப், பகுத்தறிவுலகிற்குச் செல்லும் பாதையைச் செப்பனிடும் சீர்திருத்தச் சிற்பிகளாக்கியும் வருகின்றது. இவற்றையெல்லாம் மோட்டார் வேகத்தில் மதத்தைப் பரப்பும் முயற்சிக்கு ஆதரவு தரும் அரசியல் 'அறிஞர்கள்' ஆர அமர யோசித்துப் பார்க்கவேண்டும்.

கூலித் தொழிலாளர், கொண்டு விற்போர் போன்ற வேலைப் பகுதிகளாம் வேடதாரிகளை நம்பி, அவர்களால் வீசப்படும் மதவலையில் சிக்கிச், சர்க்கார் தன்னுடைய உருவான திட்டங்களை உதாசீனம் செய்து விடக்கூடாதென்பதை, நாட்டு நலனில் அக்கறை கொண்டுள்ளஎவரும் எடுத்துக் காட்டாமல் இருக்கமுடியாது.

வேட்டியும், தாள்வடமும், வெண்ணீறும், வெண்பல்லும் காட்டி, நாட்டைக் குட்டிச்சுவராக்க முயலும் நயவஞ்சக ஞானக் கள்வர்களால் இதுவரை நாம் அடைந்துள்ள இன்னல்களை எண்ணிப் பார்க்கும் எவரும், இன்று, அத்தகையவர்களால் நடத்தப்படும் மதப்பிரசாரத்துக்கு மயங்கி, மன்பதையின் நல்வாழ்வைக் கெடுக்கும் கேட்டுக்குத் துணை புரிய மாட்டார்கள்.

எனவே, முதலமைச்சர், கோயில்கள் மடங்கள் கட்டுவதற்குப் பண உதவி செய்ததுபோதும், இனிக் கல்லூரிகளும், விஞ்ஞான-ஆராய்ச்சிக் கழகங்களுமே நமக்குத் தேவை, ஆகையால், இத்துறையில் பணத்தைச் செலவிட நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் பிறரும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் அளவுக்குக் காலமாறுதலும், மக்களின் விழிப்பும் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், காவி அணிந்து — கமண்டலம் ஏந்தி — ஓம் நமச்சிவாயா என்று உரத்த குரலில் பேசும் தம்பிரான்களின் மோட்டார் வேக மதப்பிரசாரம் நாட்டு மக்களுக்கு என்ன நன்மையை உண்டாக்கிவிடும் என்பதனை, அதனை ஆரம்பித்துவைத்த கல்வியமைச்சர் இதற்கு முன் யோசித்துப் பார்க்கவில்லையென்றாலும், இனிமேலாவது மத சம்பந்தமான கருத்துக்களில்பல, நாட்டில் எவ்வளவு மாறுதல் அடைந்துள்ளன என்பதை எண்ணிப் பார்ப்பதோடு, மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை வகுப்பதிலேயே அவருக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நம்மவரிற் பெரும்பாலோர், தாம் கடவுளிடத்து அன்பு செலுத்துவதாகச் சொல்லி, அப்பெயருக்கு அடிமையாகின்றனர். அன்புக்கும் அடிமைக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் உணர்வதில்லை. அன்பு—நட்பையும், அடிமை — அச்சத்தையுமே உண்டாக்குவன என்பதை உள்ளபடியே உணர்கின்றவர்கள், தாம் கடவுள் பெயரைக் கேட்டவுடன் உண்டாகும் அடிமையுணர்ச்சியை உடனே விட்டுவிடுவர். கடவுள் என்ற சொல்லின் பொருளை அறியாதவர்களே, தாம் புரிகின்ற தீய செயல்களைப் பிறர் அறிந்து கொள்ளாதபடி மறைப்பதற்காகவே கடவுள் வழிபாடு செய்வதாகப் பாசாங்கு செய்கின்றனர். நம்பிக்கை மோசமும், திருட்டுத் தொழிலும், பொய்யும் கடவுள் பேரைச் சொல்லியே நடைபெறுகின்றனவென்பது கண்கூடு. ஆதலால், கடவுளுக்காகப் பரிந்து பேசி மதப் பிரசாரம் செய்பவர்களிடம் மக்கள் விழிப்பாய் இருத்தல் வேண்டும்.

*

## 'புதுமைப்பித்தன்' மறைவு

'புதுமைப் பித்தன்' என்ற புனை பெயருடன், பல புதுமையான கதைகளை எழுதி நாட்டின் மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்தவரும், இன்றைய குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவரும், எளிய வாழ்க்கையும்—எழில்மிகு சிந்தனையும், எவரையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் நல்லியல்பும் ஒருங்கமையப் பெற்றவருமான தோழர் சொ. விருத்தாசலம் அவர்கள் சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்து கடந்த 30—6—48-ல் திருநெல்வேலியில் தமது இல்லத்தில் 42-வது வயதில் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அவருடைய பிரிவால் வருந்தும் மனைவிக்கும் குழந்தைக்கும் மற்றும் அவரது உறவினர் நண்பர்களுக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.


புரட்சிக் கவிஞரின்
புதிய நூல்!

தனிச்சுவை பொதிந்த
தனித் தமிழ்க் காப்பியம்!

"காதலா? :: கடமையா?"

கவியரசர் பாரதிதாசன் இயற்றியது

விலை ரூபாய் ஒன்றேகால்.
தபாற் செலவுடன் ரூ. 1-5-0

விற்பனையாளர் கழிவு 20%

முகவரி:
அமைச்சர்,
பாரதிதாசன் பதிப்பகம்,
புதுச்சேரி.

# மோட்டார் வேகத்தில் மதப்பிரசாரம்

"கோயில்களின் பயனை மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எனவே மோட்டார் வண்டியில் சென்று மதப்பிரசாரம் செய்வதால் இந்த அறியாமை நீங்கும்."

என்பதாகக் கல்வி அமைச்சர் தோழர் அவிநாசிலிங்கம் அவர்கள் 4-7-48ல் பேசியிருக்கிறார். சென்னை சர்க்காரின் ஆதரவைப் பெற்றுத் தர்மபுர மடாதிபதியால் நடத்தப்படும் மதப் பிரசாரத்தைத் துவக்கி வைக்கையில்தான் கல்வி அமைச்சர் இவ்விதம் குறிப்பிட்டார்.

"தலைமுறை தலைமுறைகளாக நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், அறச்சாலைகளுக்கும், கோயில்களுக்கும், மடங்களுக்கும் ஏராளமான பணம் நன்கொடை அளித்துள்ளனர். இப்போழுது அவர்கள் கல்வித் துறையில் கவனம் செலுத்துவதைக் காண நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்."

என்பதாக முதலமைச்சர் தோழர் ஓ. பி. இராமசாமி அவர்கள் 4-7-48ல் பேசியிருக்கிறார். காரைக்குடியில், 'டாக்டர் அழகப்ப செட்டியார் கல்லூரி'யைத் திறந்துவைக்கையில்தான் முதலமைச்சர் இவ்விதம் குறிப்பிட்டார்.

கோயில்களின் பெருமையையும், அவற்றை மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளாததால் மக்களுக்கு ஏற்பட்ட 'அறியாமை'யையும் கல்வி அமைச்சர் விளக்கி, மதப் பிரசாரத்தை, மோட்டார் வண்டியின் துணைகொண்டு விரைவாகச் செய்ய வேண்டுமென்று பேசுகிறார். மதப் பிரசாரம், நாட்டில் எவ்வளவு விரைவாகப் பரவவேண்டுமென்பதை 'நன்குணர்ந்த' கல்வி அமைச்சர் அப்பிரசாரத்தை மணி ஒன்றுக்கு 40, 50 கல் வேகத்தில் செல்லக்கூடிய மோட்டார் வண்டியின் துணைகொண்டு செய்க என்று கூறுகிறார்.

மக்களினத்தின் பொதுவான வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் கல்வி யொன்றே பயன்தரக் கூடியதென்றும், இவ்வளவு காலமும் மடங்களுக்கும்—கோயில்களுக்கும் பணத்தைக் கொடுத்துவந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இப்போது கல்வித்துறையில் கவனம் செலுத்துவதைக் காணத் தாம் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், டாக்டர் அழகப்பா போன்றவர்கள் பெரிய கல்லூரிகளைக் கட்டவேண்டுமென்றும், மற்றவர்கள் சிறு சிறு பள்ளிக்கூடங்களையாவது கட்ட முயற்சிக்க வேண்டுமென்றும், மாவட்டத்துக்கு (ஜில்லாவுக்கு) ஒரு கல்லூரியும், கிராமத்துக்கு ஒரு பள்ளிக்கூடமும் இருக்கவேண்டுமென்றும், அறிவுக் கூர்மைக்குப் பெயர் பெற்ற தமிழ்நாட்டில் ஏராளமான ஆராய்ச்சிக்கழகங்கள் இருக்க வேண்டுமென்றும், அதற்குச் சர்க்கார் இயன்றளவு உதவி செய்யும் என்றும் முதலமைச்சர் பேசுகிறார்.

கோயில்களுக்கும் — மடங்களுக்கும் இதுவரை பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தீர்கள்; அதனால் நாட்டுக்கு ஏற்பட்டபயன் ஒன்றுமேயில்லை; இப்போது கல்விக்கும்—ஆராய்ச்சிக்குமே பணத்தைச் செலவிடுங்கள்; இதனால் ஏற்படும் பயன் அளவுகடந்தது என்று முதலமைச்சர் கூறுகிறார்.

மதப்பிரசாரத்துக்கு மடாதிபதிகளும், கட்டளைத் தம்பிரான்களும் முன்வர வேண்டுமென்று கல்வி அமைச்சர் கவலைப்படுகிறார்.

விஞ்ஞானப் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அதற்கு விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளரும் தேவை என்று முதலமைச்சர் வேதனைப்படுகிறார்.

மதப்பிரசாரத்துக்கு மோட்டார் வாங்கச் சொல்கிறார் அவிநாசியார்.

கல்விக்குப் போதியபணம் இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 46 கோடி தேவைப்படுகிறது. இப்பொழுது பத்தேமுக்கால் கோடி ரூபாதான் செலவிட முடிகிறது; பணக்காரர்களும் பொதுமக்களும் இதற்கு உதவி செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார் ஓமந்தூரார்.

நாட்டின் முன்னேற்றத்தைக்காவி வேட்டி அணிந்தோரால் செய்வித்துவிட முடியுமென்று கல்வியமைச்சர் கச்சை வரிந்து கட்டிக் கதறுகிறார்.

நாட்டின் முன்னேற்றத்தை விஞ்ஞானிகளும்— ஆராய்ச்சியாளருமே செய்யமுடியும்; ஆனால் அப்படிப்பட்டவர்கள் நம்மிடம் இல்லை—இனியாவது உண்டாகமாட்டார்களா என்று உள்ளம் நொந்து கூறுகிறார் முதலமைச்சர்.

கோயில்கள் விளையாட்டு இடங்களாகிவிட்டன—மதம் மதிப்பற்றுப் போய்விட்டது என்று மயக்கமடைகிறார் மதி மந்திரியார்.

நாடு விடுதலை அடைந்துவிட்டது—விரோதிகள் அகன்றுவிட்டனர். என்றாலும், எதற்கெடுத்தாலும் அந்நிய நாட்டவரையே எதிர்பார்க்க வேண்டிய கேவலநிலை இன்னும் ஒழியவில்லையே என்று ஓமந்தூரார் மனமொடிந்து கூறுகிறார்.

இவ்வாறு ஒரே முகாமில் இருந்து கிளம்பிய இருவர், ஒரே நாளில் இருவேறு இடங்களில், இருவேறு கருத்துக்களை, மக்களின் முன்னேற்றத்துக்காகக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கூறுகின்றனர்.

நாட்டின் அரசியலை ஏற்று நடாத்தும் பெரிய பொறுப்பினைத் தாங்கிக்கொண்டுள்ளவர்களில்ஒருவர், காலப்போக்கினை உணர்ந்து, அதற்கேற்பக் காரியங்களை நடத்தவேண்டுமென்று கூறவும், இன்னொருவர் தம்முடைய நிலையையும் பொறுப்பையும் மறந்து, காலப்போக்கையும் உணராது கண்ணை மூடிக்கொண்டு கருத்துக் கொவ்வாதவற்றைக் கூறவுமான நிலைமை ஏற்படுவதைக் காண நாம் வெட்கப்படுகின்றோம்.

காரைக்குடியில் கல்லூரியைத் திறந்துவைத்த முதலமைச்சரின் பேச்சையும், மயிலாப்பூரில் மதப் பிரசாரத்தைத் துவக்கிவைத்தகல்வியமைச்சரின் பேச்சையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் எவருக்கும், முதலமைச்சரின் முற்போக்கான திட்டங்களினால் மக்களுக்கு உண்டாகும் நன்மையும், கல்வியமைச்சரின் பிற்போக்கான திட்டங்களினால் ஏற்படும் தீமையும் விளங்காமற் போகாது.

கல்வியமைச்சராவது, தம்முடைய பொறுப்பில் விடப்பட்டிருக்கும் இலாக்கா இன்னதென்பதை அறிந்து,

அதனால் மக்கள் அடையும் நன்மைகளை உணர்ந்து, அதற்கேற்ப நாட்டவர்க்கு நல்லுரைகள் வழங்க வேண்டும். அல்லது முதலமைச்சராவது கல்வியமைச்சர் முதலான தம்முடைய கூட்டு மந்திரிகளுக்கு, அவரவர்களுடைய இலாக்காக்களின் தன்மையையும் பொறுப்பையும் உணர்த்தி, அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னின்ன என்று தெளிவாக விளக்கியிருக்க வேண்டும்.

ஒரு கட்சியின் செல்வாக்கு, பலமை, அவர்களின் தகுதி-திறமை ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட நிலைமையை உண்டாக்கிய போதிலும், முதலமைச்சர் போன்ற அனுபவ அறிவும், முன்பின் யோசித்து நல்ல கருத்துக்களை வெளியிடும் ஆற்றலும் பெற்றவர்களாவது, அவர்களுக்கு வழிகாட்டியாய் நின்று, நாட்டுமக்களுக்கு நன்மை உண்டாக்கக்கூடிய காரியங்களைச் செய்யும்படி அறிவுரை வழங்கவேண்டும்.

மதக்கலப்பற்ற அரசியலை நடத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு சர்க்கார், பலதிறப்பட்ட மதங்கள் நாட்டிலிருப்பதை அறிந்தும், ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பிரசாரம் செய்யும் நடுநிலைமை தவறிய திட்டத்தை ஆதரிப்பதும், அதனை ஆரம்பித்து வைப்பதும் சர்க்காரின் கொள்கைக்கே மாறுபட்டதென்பதைக் கல்வியமைச்சர் தம்முடைய கருத்தில் நிறுத்திப் பார்ப்பதற்குக் கூட நேரமும் நினைப்பும் இல்லாமல், மோட்டார் வேகத்தில் மதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறாரே என்பதை எண்ணும் போதுதான் நாம் உண்மையாகவே வருத்தமும் வெட்கமும் அடைகின்றோம்.

இன்று நாடுள்ள நிலையில் மதப் பிரசாரம்தான் மக்களின் இன்றியமையாத் தேவையா? அதுதான் மக்களின் வறுமையையும் —பசிக்கொடுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கக்கூடியதா? மதங்கள் உலகில் தோன்றி எவ்வளவு காலமாயின? இவ்வளவு காலமாக மக்கள் மதங்களைப் பற்றிய உண்மைகளை ஏன் உணரவில்லை? மதங்கள் தோன்றிப் பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் — பரமேசுவரன் அருளைப்பெற்ற மதபோதகர்கள் பலர் வந்துபோன பின்னரும் — அவைகளை மக்களுக்கு உணர்த்தப் பிரசாரம் செய்யவேண்டுமா? கைலையில் இருந்து மதப்பிரசாரம் செய்யப்பட்டதே! வைகுந்தத்திலிருந்து செய்யப்பட்டதே! பரமண்டலங்களிலிருந்து செய்யப்பட்டதே! மெக்கா மதீனாவிலிருந்து செய்யப்பட்டதே! பலவனத்திலும் பர்ணசாலையிலுமிருந்து செய்யப்பட்டதே! காட்டில் தவம் புரிந்தும்—நாட்டில் பல்லக்கேறியும் செய்யப்பட்டதே! நாடாண்ட மன்னர்களும்—ஓட்டேந்திய ஆண்டிகளும் மதப்பிரசாரம் செய்தனரே! இன்னும் யார்யாரோ—எங்கெங்கிருந்தோ—எப்படியெப்படியெல்லாமோ மதப் பிரசாரம் செய்தனரே! இவ்வளவு செய்த பின்னரும், மதபிரசாரம் மோட்டார் வண்டி வேகத்தில் செய்யப்பட வேண்டியிருக்கிறதே! ஏன் இந்த நிலை ஏற்பட்டது? என்ற இன்னபிற காரணங்களைக் கல்வியமைச்சர் கருதிப்பார்க்கும் அளவுக்காவது தம்முடைய அறிவைப் பயன்படுத்தியிருக்கக் கூடாதா என்பதனை எண்ணும்போதுதான், மத—கடவுள் பற்றிய சில உண்மைகளை மக்கள் உணரும்படி செய்யவேண்டுமென்ற கவலை உண்டாகின்றது. சாதாரண மக்கள் மட்டுமல்ல, மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டிகளாய் அமையும் வாய்ப்பைப் பெற்றுள்ள அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும் மதவியல் — கடவுளியல் ஆகியவை பற்றிய உண்மைகளை உணர்ந்தாலன்றி, அவர்கள் மக்களின் வாழ்க்கைக்கு உண்மையான வழிகாட்டிகளாக மாட்டார்கள்.

நாம் மேலே எடுத்துக்காட்டியபடி, நம்நாட்டு மதப்புலவர்கள், தாங்கள் கூறும் மதக் கருத்துக்களை மக்கள் நம்பி ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதற்காகப் பல திறப்பட்ட முறைகளைக் கையாண்டனர். மதக்கோட்பாடுகளை விளக்கும் புராண இதிகாசங்களை மக்களிடையே வைத்து, அவற்றைப் பாடிப் — படித்து — பொருள் விரித்து அவைகளுக்குப் புத்துயிர் அளிக்க முயன்றனர் முதலில். புராண இதிகாசங்களில் கூறப்படும் கடவுட் கதைகளைக் கேட்ட மக்கள், தங்கள் பகுத்தறிவின் துணைகொண்டு, அக்கதைகளில் காணப்படும் அறிவுக்கும் இயற்கைக்கும் மாறுபட்ட நிகழ்ச்சிகளை எடுத்து ஆராய்ந்து, "இவை உண்மையிலேயே நிகழ்ந்தனவா? நிகழக்கூடியனவா? நம்பத் தக்கனவா? இவற்றால் மக்கள் அடையும் பயன் யாதாயினும் உள்ளனவா? என்று கேட்கத் தொடங்கினர்.

ஒருகாலம் இருந்தது; மதக்கோட்பாடுகள் எப்படி இருந்தாலும், அவை யாரால் சொல்லப்பட்டிருந்தாலும், அவற்றையெல்லாம் மக்கள் அப்படியே கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு நம்பவேண்டும்—நம்பாவிட்டால் 'நரகம்' என்று. இந்த இரங்கத்தக்க நிலை மக்களிடையே மாறாமல் இருந்தகாலம்வரை மதப் புலவர்கள் பாடு மிகவும் கொண்டாட்டமாகவே இருந்தது. மதக் கோட்பாடுகளை மக்களிடையே பதிய வைப்பதற்குத் தாங்கள் எதை எப்படிக்கூறினாலும், அவற்றையெல்லாம் மக்கள் நம்பாதொழியார் என்ற எக்களிப்பு அவர்களை எதைவேண்டுமானாலும்— எப்படி வேண்டுமானாலும் எழுதும்படியும் சொல்லும்படியும் செய்துவிட்டது;

"இப்படியெல்லாம், இல்லாததையும்—இருக்க முடியாததையும்—இருக்கவேண்டிய இன்றியமையாமை இல்லாததையும் — இயற்கைக்கு மாறாகவும்—அறிவுக்கு ஒவ்வாததாகவும் எழுதியும் பேசியும் வருகின்றோமே! இவற்றை மக்கள் நம்புவரா? நம்பும்படி செய்வதுதான் முறையா? மக்கள் நம்புவதொருபுறம் இருக்கட்டும்; இவற்றை எழுதியும் பேசியும் வருகின்ற நாமாவது இக்கதைகளை நம்புகிறோமா? நாமோ அன்றிப் பிறரோ நம்பக்கூடியமுறையில் நம்மால் எழுதப்படும் கதைகள் அமைகின்றனவா?" என்று கூட எண்ணிப்பார்க்க நேரமோ அறிவோ இல்லாத நிலையில், அவசர அவசரமாக ஆயிரக்கணக்கான அண்டப் புளுகுகளை ஆண்டவன் பேரைச் சொல்லி எழுதி வைத்துவிட்டனர்.

ஆண்டவனைப் பாதுகாப்பதற்கு மதம் என்னும் அகழியும், மதத்தைப் பாதுகாப்பதற்குப் புராண இதிகாசங்கள் என்னும் மதிற்சுவரும் சுற்றி அமைக்கப்பட்டிருப்பதன் காரணம் என்ன என்பதை மக்கள் அறியவும் அவைபற்றி ஆராயவும் தொடங்கினர். "எங்களையும் பிற உயிர்களையும் படைத்துக்காத்து இரட்சிப்பதாகச் சொல்லப்படும் ஆண்டவனுக்கு இத்துணைப் பாதுகாப்புகள் எதற்காக? எங்களைப்படைத்த ஆண்டவனை நாங்களே அறியும்படி செய்யமுடியாத ஆண்டவன் தன்னை இன்னார் என்று அறிவிப்பதற்கு ஒரு மதத்தையும்,

(2-ம் பக்கம் பார்க்க)

# திராவிடஸ்தான்!

[சாத்தூர், சா. இராமசாமி]

## 1.

## நமது தாய் நாடு.

'சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர்
வங்கம்,
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்;
அறிவுந் திறனும் செறிந்த நாடு,
வளமார் எமது திராவிடநாடு
வாழ்க! வாழ்கவே!!'

வாழையடி வாழையாய் வந்த தமிழ்மரபின், வழி வந்தோர்கள் நாம்; இது நம் நாடு! நாம் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து வரும் பொன்னாடு! இதற்கில்லை ஈடு! முடியுடை வேந்தரையும், படையுடை மாந்தரையும், வளமிகு நாடுகளையும் பெற்று வெற்றிவாழ்வு நடத்திவந்த வீரகுல சான்றோராகிய நாம், இன்று எல்லோரும் ஒன்று கூடிப், பழம்புகழ் பாடவும்,—நிகழ்கால இழிநிலை சாடவும் எதிர்காலப் பெரும்புகழ் தேடவும் வேண்டுமென்பதைத் தலைப்பிலே சூடிய 'நாட்டுப்பண்' மூலம் நமக்கெல்லாம் ஞாபகமூட்டுகிறார் புரட்சிக்கவி பாரதிதாசன். அவரது கவிதை அழகிலே உண்மை ஒலிக்கிறது! ஒளிவீசுகிறது! கம்பீரம் தொனிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அக் கவிதைமலரிலே நம் நாட்டு 'மறுமலர்ச்சி' மணம் கமழ்கின்றது பாருங்கள்! ஒவ்வொரு தமிழனையும் தட்டி எழுப்பி அவனது உள்ளத்திலே உணர்ச்சியும், கிளர்ச்சியும் பொங்கிடும் விதத்திலே உள்ளது உள்ளபடி எழிலும் வளமும் சொல்லி, இழந்துபோன அவர்களது உரிமைக்கு உயிர் கொடுக்கிறார் பாரதிதாசன். அச்சீரிய கவிதையிலிருந்து நமது தாய்நாட்டின் உருவமும், பெருமையும் படம்பிடித்துக் காட்டும் கவித்திறமையைக் காணுங்கள்!

இப்பரந்த உலகிலே பண்டைய பெருமை படைத்ததொருநாடு உண்டெனில் அது, நம் தமிழ்நாடே என்பதும், தரணியெல்லாம் புகழப்பட்டவன் தமிழனே தான் என்பதும் எல்லாத் தேசத்தாரும், எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்டதொன்றாகும். ஏனெனின், பாரதிதாசன் ஒரு 'பண்ணில' கூறியாங்கு மானமொன்றே வாழ்வெனக்கொண்டு வாழ்ந்த முறையால்தான். இக்கூற்றை எவரும் மறுக்க முடியாது; மறுக்கவும் கூடாது என்பதை வரும் ஆதாரங்களால் விளக்கி வைப்பதன் மூலம் தமிழர் உரிமையை வற்புறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எனது நோக்கம் எவ்வளவுதூரம் பலிதமாகிறதென்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவீர்கள் என்று நம்புகிறேன். ஆதலின் தயவு கூர்ந்து அவசரப்படாமலும், ஆத்திரம் கொள்ளாமலும் கவனமாகப் படித்துக் கொண்டு வாருங்கள். சரியென்று பட்டதை எடுத்துக்கொள்ளுங்கள்; தவறு என்று படுவதைத் தூரத் தள்ளிவிடுங்கள். ஆனால், நடுவு நிலைமை தவறவேண்டாம் என்று மாத்திரம் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஒரு தமிழன் கிறிஸ்தவனாக இருக்கலாம்; முஸ்லீமாக இருக்கலாம், இந்துவாக இருக்கலாம், பௌத்தனாகவுமிருக்கலாம். ஆயினும் மதம் அவனது மரபு அல்லது ஜாதி அல்ல! பிறப்பில் அவன் தமிழன். பிற்காலத்தில், காலதேச வர்த்தமானத்தையொட்டித் தங்கள் தங்கள் சௌகரியத்திற்கு ஏற்படுத்திக் கொண்ட கொள்கை, (சமய)க் கூட்டத்தில் தனக்கும் பாதுகாப்புக் கிடைக்குமென்று நம்பி நுழைந்து கொண்டான் தமிழன் அவ்வளவுதான்.

பிறக்கும் பொழுது நிர்வாணமாக இருக்கும் குழந்தை வளர்ந்து பெரியவனானவுடன் தனக்குப் பிடித்தமான சிவப்புச்சட்டையையோ, பச்சைச் சட்டையையோ, அல்லது மஞ்சள் சட்டையையோ, அணிந்து கொள்ளும்போது, அவனைப் பச்சைச்சட்டைக்காரன் அல்லது மஞ்சள் நிறச் சட்டைக்காரன் என்று குறிப்பிடுகிறோம். எந்தச்சட்டையையும் தனக்குத் தகுதியல்ல என்று கழற்றி எறிந்துவிடும் பொழுது அவனை அந்த மனிதன் இந்த மனிதன் என்றே சொல்லுவோம். அது போல ஒரு தமிழன் இந்து மதத்தையோ கிறிஸ்துமதத்தையோ ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ளும் வரையில் அவனை இந்து அல்லது கிறிஸ்தவன் என்று பெயரளவில் தான் சொல்லலாம். மரபுபடி அவன் எல்லா வகையிலும் தமிழனே தான்.

ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வடமேற்குக் கணவாய் வழியாக ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு வயிற்றுப் பிழைப்புக்குத் தமிழர் வாழ்ந்த திராவிட நாட்டுக்குள் தஞ்சம் புக நேர்ந்ததால், வந்தது இந்துமதம்! அவர்கள் தஞ்சம் புகுந்து வந்த வடநாட்டுமீது பாரசீக தேசத்தார் பாய்ந்து விழுந்து படைவீடு ஏற்படுத்திக்கொண்டதால், விளைந்தது இஸ்லாம் மதம். மேனாட்டார் மூழ்கக் குளித்து நாடு பிடிக்க முயன்றதால், ஏற்பட்டது கிறிஸ்தவ மதம்.

ஒரு உண்மைத் தமிழன் கிறிஸ்தவனாக இருந்தால் அவன் ஐரோப்பியனாகிவிட முடியாது. இஸ்லாம் மதத்தைத் தழுவினால் பாரசீகனாகி விடமுடியாது. அதுபோல இந்துவாக இருந்துவிட்டால், அவன் ஆரியன் ஆகிவிட முடியாது. தமிழனுக்கு இந்துமதத்தில் மதிப்புக்கிடையாது. சூத்திரன் என்ற கடைசி வகுப்பிலேயே நிறுத்தப்பட்டுவிடுகிறான் தமிழன். எனவே ஒரு தமிழனின் சமய வாழ்வு ஒட்டுச்சுவர்போன்றதுதான்.

தொல்காப்பியர் கூறிய அகம், புறம் வாழ் ஒழுக்கமும், திருத்தக்க தேவர் [illegible] (தமிழ்த்தழிய சாயலவா) இலட்சணமும், திருவள்ளுவர் கூறிய சான்றாண்மையும், இளங்கோவடிகள் சொல்லிய தனியிடப்புணர்ச்சியும், கபிலர் கூறிய ஒரே கடவுள் கொள்கையுமே ஒரு உண்மைத் தமிழனின் வாழ்வு இலக்கணம். ஒருதனித் தமிழனின் குறிக்கோள் ஏதேனும் ஓர் சமயப்பற்று அல்ல; அது அன்னியநாட்டினர் கொள்கை. வாழ்வை வாழையடி வாழையாய் வளரச்செய்வதற்கு அன்பு, நட்பு, காதல் ஆகிய இல்லறக்குணங்களைக் கடைபிடித்து ஒழுகுவதும், தாய்நாட்டைக் காப்

பாற்ற விரோதிகளை ஒழித்துக்கட்டும் போராட்டப்பழக்கமுமே உண்மைத்தமிழர்களின் வாழ்வுக் குறிக்கோளாக இருக்கவேண்டும். இவைதான் நமது பண்டைத் தமிழ் நூல்களின் கட்டளையாகும். பழையகால தமிழர் சமுதாயத்தின் வாழ்க்கைப் பண்பும் அவையேதான்.

நேசத்தமிழா! நீ கருப்புச் சட்டையை அணிந்திருந்தாலும் சரி; சிவப்புச்சட்டையை அணிந்திருந்தாலும் சரி! ஆதவன் ஒளியும் தூய காற்றும் உன் உடலைத் தழுவினால்தான் நீ ஆரோக்கியமுடையவனாகவும், ஆயுள் நிறைந்த பலவானாயும் வாழமுடியும். ஆதலின் உன் பழைய சுதந்திர உருவத்தை மறைத்துப் புதிய அறிவுப் பிரகாசம் வெளிவராவொட்டாதபடி தடுக்க இறுக்கிக்கொண்டிருக்கும் 'மதச்'சட்டையைக் கழற்றித் தூர எறிந்துவிடு; [illegible] ஆக வேண்டும். கொஞ்சநேரமாவது சுயேச்சைக்காற்றையும், ஞானோதய ஞாயிற்றின் ஒளியையும் அநுபவித்தால்தான் வாழ்விலே சுதந்திர இன்பத்தை அடையமுடியும்.

“வனத்திலே மேய்ந்து இனத்திலே அடை” என்பது தூயதமிழ் பழமொழி. ஒவ்வொரு தமிழனும் தனசொந்த இனமான திராவிடக் கூட்டத்திற்கு வந்து இங்கு நடக்கும் மறுமலர்ச்சி, புதுமை விழாவில் கலந்து களிக்கவேண்டுவது அவசியமாகும். அதுவே உலக நியாயமும் ஆகும்.

தமிழனல்லாத போலிகள், நமது தாய் நாட்டில் தஞ்சம் புகுந்து, வஞ்சகத்தால் வாழ்வடைந்து நம் தாய்மொழியாம் தமிழைப் பிழைப்பு மொழியாகக் கொண்டிருப்பதால், தங்களையும் தமிழர் என்றே சொல்லிக்கொள்வார்கள். ஆனால் தமிழ்மொழியோடு பிறமொழிச் சொற்களைக் கலந்து கொலை புரிந்தும், கொச்சையாகப் பேசியும் வடமொழியே தெய்வீக மொழியென்றும் செப்பித் திரிவார்கள் — திராவிட இனத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; தனித் தமிழர் நூல்களான தொல்காப்பியம், திருக்குறள், அகம், புறம், ஐங்குறுநூறு, சிலப்பதிகாரம் சிந்தாமணி, கலிங்கத்துப்பரணி மூதுரை முதலிய அரும்பெரும் சுவடிகளைத் திரும்பிக்கூடப் பாராமல்—அவைகளைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லாமல் தமிழர் நீதிக்குப் புறம்பானதும், அந்நியர் மொழியிலிருந்து இறக்குமதியானதுமான ஜாதிப் பிரிவும், ஒவ்வொரு பிரிவுக்கொரு நீதியும், ஆபாசப் பழக்கங்களும் நிறைந்த இராமாயணம், பாரதம், பாகவதம், கீதை உபநிசத்து, கண்ணன் காதல் லீலைகள், கந்தபுராணம், பெரியபுராணம், தேவாரம் போன்ற ஆரியர் இலக்கியங்களையே பேச்சிலும், மூச்சிலும், வாழ்விலும், எழுத்திலும், மேடையிலும் நடையுடை பாவனைகளிலும், உணவிலும் உறக்கத்திலும் பின்பற்றித் திரிவார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளுவது நிரம்ப நல்லது; அதைவிட நல்லது, நமது பண்டைய நாட்டுப் பெருமைகளையும் பழைய காலத் தமிழர் பண்புகளையும் படித்தறிந்து உணர்ந்து திருந்திக் கொள்ளுவது. ஒவ்வொன்றாக வரிசை பிடித்து வரைந்து வருகிறேன். கவனமாகப் படித்து உண்மையை உணர்ந்து புதிய போக்கில் திருந்திக் கொள்ளுவதே புத்திசாலிகளின் கடமையாகும் என்பதை மீண்டுமோர்தடவை வற்புறுத்திக்கொண்டு மேலே செல்லுகிறேன்.

உலகின் தலையாய சிறப்பை வகித்து வந்த நமது தமிழ் தாயகம், இன்று பன்னிரண்டு மாவட்டங்களை (ஜில்லாக்களை)யே எல்லையாகக் கொண்டுள்ளதென நம்மவர்களிற் சிலர் நம்புகின்றனர் பாவம்! அவர்களின் கண்களிலும் கருத்துகளிலும் விரோதிகள் மண்ணை வாரித் தூவி விட்டு, அவர்களது அகன்று விரிந்த தாய்நாட்டையும், தனிப் புகழ் கொண்ட தமிழன் மாண்பையும் சுருக்கிக் கருக்கிவிட்டார்கள் துரோகிகள்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் நமது தாய் நாட்டின் வடக்கு எல்லை இமயமலைவரை பரவியிருந்ததென்றும், தெற்குக் கோடியாம் கன்னியாகுமரி முனைக்குக் கீழ் பனைநாடு முதலிய நாடுகளும், குமரிக்கோடு மணிமலை முதலிய மலைகளும், முத்தூர், கபாடபுரம், தென்மதுரை முதலிய பெரிய பல நகரங்களும், பஃறுளியாறு, குமரியாறு முதலிய ஆறுகளும் ஆகிய எழுநூற்றுக்காத தூரமுள்ள நாடு தெற்கே இருந்ததென்றும், அவையாவும் கடலால் மேவப்பட்டதென்றும், சரித்திர ஆதாரங்களும், தமிழர் இலக்கியச் சான்றுகளும் அறிவிக்கின்றன.

'வடிவேலெறிந்த வன் பகை
பொறாது பஃறுளியாற்றுடன்
பன் மலையடுக்கத்துக் குமரிக்
கொடுங் கடல் கொள்ள!'

என்று ஏக்கமுடன் கூறுகிறார் இளங்கோவடிகள். அதாவது வடவனாகிய சுப்பிரமணியன் என்பவன் தென்னவராகிய தாரகன், சூரபதுமன் எனும் தமிழ் வேந்தர்களை வேல் கொண்டு கொன்றழித்த கொடுமை போதாதென்று எஞ்சிய (மேலேகூறிய) பெரும்பகுதி தமிழகத்தையும் கடல் விழுங்கிவிட்டனவே என்று ஏங்கிப் பெருமூச்சு விடுகிறார் இளங்கோவடிகள்.

தற்போதுள்ள இந்துமகா சமுத்திரத்தின் பெரும் நீர்ப்பரப்பு முன்னோர் காலத்தில் முழுதும் நிலப்பரப்பாய் இருந்ததென்றும், அந்நிலப்பரப்பின் தொடர்ச்சி குமரி முனையைத் தொட்டிருந்ததென்றும், அவ்விடத்தில்தான் முதன் முதலில் மனிதவர்க்கம் தோன்றினதென்றும் பேராசிரியர்கள் எர்னஸ்ட்ஹெக்கல், ஸ்காட் எலியட் ஆகிய அறிஞர்கள் எழுதிய 'படைப்பு வரலாறு' 'மறைந்த எலமூரியா' முதலிய நூல்களில் வரைந்துள்ளனர். அவ்வறிஞர்கள் கூறிய மறைந்த எலமூரியாக் கண்டம் என்னும் நிலப்பரப்பே பண்டைத் தமிழர் (இலக்கியங்கள்) கூறும் குமரி நாடு. அப்பழைமையான நிலப்பரப்பின் ஒருதொகுதியே நாம் இப்பொழுது வாழும் தாய்நாடு. ஆயினும் பண்டைய பெருமை பேசிப் பயன் என்ன? அது 'இறந்தகால உலக வரலாறு' என்று வேண்டுமானால் தள்ளி விடுவோம்.

ஆனால் இன்றைய நம் தாய் நாட்டின் உண்மையான எல்லை எது? நமது கண்முன்னே காணும் உண்மையான பிரமாணங்களைத் தள்ளி விட்டு விசாலமான நமது எல்லைப் பரப்பை இழந்துவிடுவதா? கூடாது!

சில நூற்றாண்டுகளுக்கு முன் சேர நாடும், தெலுங்கு நாடும் கன்னடமும் நமது தாய் நாட்டுடன் இணைக்கப்பட்டிருந்தது, இதற்கு இலக்கியச் சான்றுகளும், சரித்திர ஆதாரங்களும் ஏராளமாக இருக்கின்றன.

நமது தொன்னூலான தொல்காப்பியத்தில்,

'வடவேங்கடந் தென்குமரி

(8-ம் பக்கம் பார்க்க)

# அவர்கள் உள்ளம்

நாடு, அன்னியராட்சியில் சிக்கிவிடும்போது, தெளிவும் வீர உணர்ச்சியும் கொண்ட யாரும், விடுதலைப் போர் தொடுக்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டுவர்—அந்த அக்கறையின் பயனாக, தமக்குள் உள்ள ஜாதிமத குலவேறுபாடுகளையும் மறப்பர்—சீறிப்போரிடுவர் எதிரிகளுடன்—வெற்றிக்காக உழைப்பர்-தியாகத்தீயில் குதிப்பர்-தாயகத்தின் தளைகள் பொடிபட வேண்டுமென்பர்-மற்ற விஷயங்கள் முக்கியமல்ல என்று கூறுவர்.

வெற்றி கிட்டியதும்—அதுவரை மூடிபோட்டு வைக்கப்பட்டிருந்த வேற்றுமைகள்—பேதங்கள் — தலைதூக்கத் தொடங்கும்.

நமக்குள் பேதமா! நமக்குள் வேற்றுமையா!—என்று உருக்கமாகப் பேசுவதால் மட்டும்—உபதேசம் செய்வதால் மட்டும், இந்த உணர்ச்சியை உருக்குலைத்துவிட முடியாது.

பேதங்கள் உள்ள வரையில், பேதங்களால் ஏற்படும் உணர்ச்சியும் இருந்தே தீரும்.

போர்க்காலத்து ஒற்றுமையை, வெற்றிக்குப் பிறகு காணமுடியாது-ஏனெனில் வெற்றியின் விளைவுகளை-நாட்டுக்கு ஏற்பட்ட புது வாழ்வின் சுவைகளை, அனைவரும் சமமாக அனுபவிக்க விரும்புவர்-அப்போது, ஜாதிபேதம்எனும் பழைய முறையை ஆதாரமாகக்கொண்டு, உயர்ந்த வகுப்பினர், விடுதலை பெற்ற நாட்டிலே விசேஷ சலுகைகள் பெற்று வாழ்வு நடாத்த விரும்பினால், மற்ற வகுப்பினரின் மனம்நோகாமலிருக்க முடியாது. எனவே, சமத்துவம் கோருவர்.

எங்ஙனம் ஒரு நாடு, மற்றோர் நாட்டினிடம் அடிமைப் படுவதால் நலிகிறதோ, அதே போலவே தான் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்ட பிறகு, அந்த நாட்டிலேயே, ஜாதி முறையினால சிலர் ஆதிக்கக்காரர் ஆவதால், மற்றவர்களுக்கு வாழ்வில நலிவு ஏற்படும்.

அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்தொழிக்க விடுதலைப்போர் நடத்தியது போலவே, உள்நாட்டிலேயும் ஜாதி உயர்வு பேசும் உலுத்தர்களின் ஆதிக்கத்தையும் எதிர்த்தொழிக்கும் விடுதலைப்போர் தேவைப்படுகிறது.

நம் நாட்டில், இன்று நடைபெறுவது, இந்தப்போர் தான். இந்தப் போர்—ஓர் தொடர்கதை. இந்திய பூபாகத்தில் பல்வேறு பகுதிகளில், உயர் ஜாதிக்காரர்கள், தமது ஆதிக்கத்தை அவ்வப்போது திணித்திருக்கிறார்கள் —— ஒவ்வோரிடத்திலும், இந்த ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு ஏற்பட்டே இருக்கிறது.

மராட்டிய மண்டலம், மொகலாய அரசு முழுப்பொலிவுடன் வளர்ந்ததும், தேய்ந்து கிடந்தது.

மாவீரன் சிவாஜி கிளம்பினான்—முரசு கொட்டினான்-மாவீரர் படை திரண்டது—மாற்றார் கண்டு மருளும் அளவுக்கு.

அப்போதும், அங்கு உயர்ஜாதிக்காரர்களின் உள்ளமும் செயலும், மற்றவர்களின் எண்ணத்துக்கு மாறுபட்டதாகவே இருந்தது.

போர்! போர்! தாயகத்தின் விடுதலைக்காகப் போர்!—என்று முழக்கமிட்டனர், இலட்சக்கணக்கான வீரர்கள்.

போராம், போர்! நாட்டிலே ஒரே ரகளை! கொலைக்களமாகிறது நாடு! —செல்வம் இப்படிப் பாழாகிறது! —என்று சோகித்தனர் 'உயர் ஜாதியினர்.'

குருடனும் நொண்டியும் கூட, "நாம் சாவதற்கு நேரமில்லை' என்று கூறி, நாட்டு விடுதலைக்குப் பணி புரிந்தனர்—தம்மால் முடிந்ததை—தமது கடைசி மூச்சு இருக்கும் வரை.

அப்போதும், யாகம், பிராயச்சித்தம், ஹோமம், ஜெபதபம், என்ற பழையனவற்றையே பிரமாதமானதாகக் கருதினர், உயர் ஜாதியினர்.

உயர் ஜாதி என்று கூறி உரிமை கொண்டாடிய, பார்ப்பனரின், மதக் கோட்பாடுகளை மறுத்து, சமரச ஞானம் பேசினர், சாதுக்கள், மராட்டியத்தில். அவர்கள் மறுமலர்ச்சியின் தூதர்கள். அவர்களிடம், உயர் ஜாதியினருக்கு, மிக மிக அலட்சியம். விதண்டா வாதிகள்! குதர்க்க வாதிகள்! நிரீஸ்வர வாதிகள்! நாஸ்தீகர்கள்!—என்றெல்லாம், சாதுக்களை நிந்தித்தனர்.

அந்த நாட்களிலே, ஒருபுறம் வீரர், விடுதலைப் போருக்காக உழைத்தனர்; மற்றோர்புறம் உயர் ஜாதிக்காரர், தங்கள் ஆதிக்கத்துக்காக வேலை செய்தனர். அந்த நிலைமையை விளக்கும் சில உரையாடல்களைக் கீழே தந்திருக்கிறோம்—

### காட்சி 1.

இடம் மராட்டிய வீரன்விடுதி.

காலம் மாலை

பாத்திரங்கள்:—

குருடானவீரன், தேவாஜீ.
முடமானவீரன், லோகாஜீ.

[கத்தி சாணை பிடிக்கும் இயந்திரம், கத்திகள் குவியலாக இருக்கின்றன, குருடன் இயந்திரக் கைப்பிடியைச் சுழற்றுகிறான், முடவன் கத்தியைக் கூர்தீட்டுகிறான், வீராவேசப்பாடலுடன், கத்தியைத் தீட்டிக்கொண்டே இடையிலே ஓய்ந்து]

லோகாஜீ:- தேவாஜீ! வேகமாகச் சுற்று! வீரத்தோடு சுற்று! கூர்தீட்டப்பட்ட வாட்களைக் குவிப்போம், மராட்டிய பணிகளின் கண்களிலே வீரக்கனல் கக்குவதுபோலச் சாணைக் கல்லிலே இருந்து பொறிகள் பறக்கின்றன.

தேவாஜி:- (சுற்றுவதை நிறுத்தி விட்டு) லோகாஜி! மராட்டிய மண்டலத்திலே சுதந்திரதீபம்ஏற்றிவைக்கப்படும் நேரத்தில், ஆண்டவன் என் தீபங்களை அணைத்து விட்டான். நான் எப்படிக் காண்பேன் தியாகத் தீப்பொறிகளை? லோகா! காலிழந்த நீ பாக்யசாலி கண்ணிழந்த நான்,

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 11—7—48 [ஞாயிறு

# நீதியும் நேர்மையும்

✻

உடையார்பாளையம் தோழர் வேலாயுதம் அவர்கள் கொலைபற்றிய நிகழ்ச்சி இப்போது தமிழ்நாட்டில் அதிக பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது. தோழர் வேலாயுதம் கொலை செய்யப்பட்டார் என்பதை அதிகார பூர்வமாக அறிவதில் சம்பந்தப்பட்ட போலீசாரால் கொலை ருசுவாக்கப்பட்டு, அக் கொலையில் ஈடுபட்டவர்கள் பலர் மீது வாரண்டு பிறக்கப்பட்டுச் சிலர் கைது செய்யப்பட்டனர். தோழர் அருணாசலம் எம். எல். ஏ., அவர்களும் வேறு சிலரும் தலைமறைவாக இருந்து, திருச்சி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம் சரண புகுந்து ஜாமீனில் வெளிவந்தனர்.

இந்த நிலையில், திருச்சி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி அது சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. இது தெரிந்ததும் தமிழ் நாட்டில பெருத்த பரபரப்பு உண்டாகிவிட்டது. வழக்கு வாபஸ் பெறப்பட்டதைக் கண்டித்துப் பல ஊர்களிலிருந்து தீர்மானங்கள் நிறைவேற்றிச் சர்க்காருக்கு அனுப்பப் பட்டுள்ளன.

சர்க்கார், இது சம்பந்தமான எல்லாவித ரிக்கார்ட்டுகளையும் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியிருக்கிறது.

இந்த வழக்கை வாபஸ் பெறும்படி செய்த திருச்சி ஜில்லா மாஜிஸ்ரேட் இப்போது வேறு இடத்துக்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார் என்று தெரிகிறது. இதன் மர்மம் என்ன என்று தெரியவில்லை.

தோழர் வேலாயுதம் அவர்கள் ஒரு சுயமரியாதைக்காரராய் இருக்கலாம் அல்லது திராவிடர் சமூகத்தைச் சார்ந்தவராக இருக்கலாம். அதுவேறு விஷயம். ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்றால், அக்கொலைக்குக் காரணமாயிருந்தவர்களைச் சட்டப்படி விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதே நீதியாகும். தோழர் வேலாயுதம் கொலை செய்யப்பட்டார் என்று ருசுவாகிப் பலர் கைது செய்யப்பட்ட பின்னர், இவ் வழக்கைச் சட்டப்படி விசாரியாமல் வாபஸ் பெறும்படி செய்தது எந்த வகையில் நியாயம் என்பது தெரியவில்லை.

இக்கொலை சம்பந்தமாகத், "தினசரி" பத்திரிகை தலையங்கங்கள் எழுதிச், சர்க்கார் இவ்வழக்கை நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டு விசாரிக்க வேண்டுமென்றும், ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இந்தவழக்கைவாபஸ் பெறும்படி செய்ததைக் கண்டித்தும் இருக்கிறது. யாராய் இருந்தாலும் நீதி ஒன்றே என்பதைஎடுத்துக்காட்டிப் பொதுமக்களுக்கும் விழிப்பும், சர்க்காருக்குக்கும் எச்சரிக்கையும் உண்டாக்கிய 'தினசரி'யை நாம் பாராட்டுகிறோம்.

தோழர் வேலாயுதம் அவர்கள் கொலையுண்ட நாளிலிருந்தே 'விடுதலை' இது சம்பந்தமாக எழுதிச் சர்க்கார் நடுநின்று நீதி வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறது.

நாட்டில் நீதியை நிலைநாட்டுவோம்—நேர்மைக்கு வழி கோலுவோம்—இதுவே ஜனநாயக ஆட்சி என்பதற்குப் பொருள் என்று கூறி வந்த காங்கிரஸ் கட்சியார்தான் இன்று நாட்டை ஆளும் பெரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனர்—நீதிக்கும் நேர்மைக்கும் நேர்மாறான காரியங்கள் இனி நாட்டில் நடைபெறா என்பதனை மெய்ப்பிக்கும் முறையில் இவ்வழக்கு ஒரு சோதனைக் கருவியாக அமைந்திருக்கிறதென்பதையும் சர்க்காருக்கு நினைவூட்டுவதன் வாயிலாக நீதியையும் நேர்மையையும் எதிர்பார்க்கிறோம்.

முதலமைச்சர், இது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டு, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறியுள்ளார். எனவே, இவ்வழக்கில், நீதி நிலை நாட்டப்பட்டு, நேர்மை கடைபிடிக்கப்படும் என்றும், முதலமைச்சர் இவ்வழக்குச் சம்பந்தமாக ஆவன செய்வார் என்றும் எதிர்பார்க்கிறோம்.

✻

13-ம் பக்கத் தொடர்ச்சி

ஆயிடை தமிழ்கூறு நல்லுலகம்'
என்றும்,

நன்னூலில்,
'குணகடல் குமரி குடகம்
வேங்கடம்
எனும் நான்கெல்லையினுள்
ளிருந்த தமிழ் கடலுள்'
என்றும்,

புறநானூற்றில்,
'வடா அது பனி படு
நெடுவரை வடக்குந்
தெனு அதுருக கெழு
குமரியின் தெற்கும்'
என்றும்,

சிலப்பதிகாரத்தில்,
'நெடியோன் குன்றமும்,
தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புன
லூட்டு'

என்றும் கூறப்பட்டிருக்கிறது. மேலே கூறிய இலக்கியச் சான்றுகளை ஆராயப் புகுந்த சரித்திர ஆசிரியர்கள் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக அவை கூறியபடிதான் தமிழ்த் தாயகத்தின் எல்லைகளாக இருந்து வருகிறது என்பதை தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

தமிழரிலிருந்துதான், தெலுங்கர், மலையாளர், கன்னடர், துளுவர், ஆகிய இனங்கள் பிரிந்ததென்றும், இக்காலத்தைப்போல் அக்காலத்தில் நவீன வாகன வசதியும் துரிதப் பிரயாண வசதியும் இன்மையால், ஒரு பகுதியில் நிகழும் மொழிப் பிரயோகம், முன்னேற்றம் ஆகியவை மற்றொரு பகுதிக்கு எட்ட முடியாமற்போய், தமிழ்மொழி சிதைவுற்று தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவு என வெவ்வேறு உருவைப் பெற்றுவிட்டன வென்றும், அவ்வைந்து பிரிவினரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவரென்றும், ஆதலின் அவர்கள் அனைவரையும் சேர்த்து 'திராவிடர்' என்ற ஒரு பொதுப் பெயரால் அன்னியர்கள் அழைக்கலாயினர் என்றும் எடுத்துச் சொல்லுகின்றனர்.

(தொடரும்)

# கட்டாய இந்தி வேண்டாம்.

1. தமிழ் மக்களுக்கு, அவர்களின் பிறப்பு மொழியாகிய தமிழ்மொழி இருக்கிறது. எனவே, அயல்மொழியான 'இந்தி'யைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

2. தமிழ்மொழி, தொன்மையும் — இனிமையும் வாய்ந்து, இலக்கிய—இலக்கண வளம் நிறைந்து, கலைச் செல்வமும்—நாகரிக மேம்பாடும் பெற்றுள்ளது. எனவே, இவை ஏதுவும் அமையப் பெறாத இந்தி மொழியைத் தமிழ் மக்களுக்குக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

3. இந்திமொழி, சமஸ்கிருதத்தின் மறு வடிவம்; சமஸ்கிருதம் ஆரிய நாகரிகத்தை முதன்மையாகக் கொண்டது; இந்திமொழி கற்க வேண்டுமெனபதன் நோக்கம், தமிழ் நாட்டில் ஆரிய நாகரிகத்தைப் பரப்பவேயாகும். தமிழ் மக்களுடைய நாகரிகம், வேறு மொழியாளரின நாகரிகங்களைவிடப் பன்மடங்கு சிறந்ததெனப் பற்பல பேரறிஞர்களால் பாராட்டப்பட்டது. எனவே தமிழ் மக்களின் நாகரிகத்தைச் சிதைத்து, ஆரிய நாகரிகத்தையே தமிழ்நாட்டில் புகுத்தும் இந்தி மொழியைத் தமிழ் மக்களுக்குக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

4. தமிழ் மக்கள் தனியரசு கோருகின்றனர்; தனியரசு ஏற்பட்டதும், தமிழ் நாட்டில் தமிழ் மொழியே அரசியல் மொழியாகத் திகழும். எனவே, இந்திமொழியைத் தமிழ் மக்களுக்குக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

5. தமிழ்நாட்டுக்குப்புறம்பான வடநாட்டவரின் தொடர்புக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்றால், அதற்கு, இப்போது இரு சாராருக்கும் தெரிந்த ஆங்கிலமே போதுமானது. எனவே, அதன் பொருட்டாக இந்தி மொழியைத் தமிழ் மக்களுக்குக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

6. இந்திமொழியைக் கற்றுக் கொண்டால், இவ்வுபகண்டத்துக்கு அப்பாலுள்ள அமெரிக்கா — ஐரோப்பா முதலான நாடுகளில் இருப்பவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவோ — தொடர்பை உண்டாக்கிக் கொள்ளவோ முடியாது. அதற்கும் ஆங்கிலம்தான் துணைபுரியும். எனவே, தமிழ் மக்களுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

7. மாணவர்களுக்கு மூன்று மொழிகளை அதாவது தமிழ்—ஆங்கிலம் — இந்தி முதலான மொழிகளை கட்டாய பாடமாக்குவது, அவர்களின் படிப்புக்கு, அவர்களால் தூக்க முடியாத சுமையை அவர்கள் தலைமீது ஏற்றுவதாகும். எனவே தமிழ் மாணவர்களுக்கு இந்திமொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

8. ஒரு மொழியையே பேசிவரும் ஒரு நாட்டவரிடையே பலவகைப்பட்ட பிளவுகளும், சச்சரவுகளும் காணப்படும்போது, பலமொழிகளைப் பேசிப், பல்வேறு கொள்கைகளுடன் வாழும் பல பகுதியினரையும் ஒரு பொதுமொழி கற்பதனால் ஒற்றுமையாக்கி விடலாம் என்று கருதிப் பாடுபடுவது, "உமிக்குற்றிக் கைசலித்த" பாங்கையாக முடியுமல்லது, அதனால் யாதொரு பயனும் விளையாது. எனவே, தமிழ் மக்களுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

9. தென்னாட்டவர் இந்தி கற்றுவிட்டால், வடநாட்டில் உத்தியோகம் பார்க்க முடியும், இல்லையேல் முடியாதென்று கூறப்படுகின்றது. இக்கூற்றுக்குப் பொருளே இல்லை. மாகாணங்கள் தனித் தனியாகப் பிரியவேண்டுமென்ற கொள்கை அசைக்க முடியாததாகி விட்டது. இந்த நிலையில் வடநாட்டில் உத்தியோகம் பெறக்கூடியவர்கள் இருக்கமுடியுமா? யாரோ ஒருவர் இருவர், இப்போது வெளிநாட்டுத் தூதுவர்களாக இருப்பதுபோல் இருக்கும் நிலையே மாகாணப் பிரிவினை ஏற்பட்டபின் இருக்கும். இந்த நிலை ஏற்படும் போது (ஏற்பட்டே தீரும்) தென்னாட்டு மாணவர்கள் அனைவரும் இந்தி கற்பதால் ஏற்படும் பயன் ஒன்றுமே இல்லை. எனவே, தமிழ் மக்களுக்கு இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

10. தமிழ் நாட்டில் இந்தி கட்டாய பாடமாகக் கூடாதென்பதைத் தமிழ் மக்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே, ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றும், இரு தமிழ் இளைஞர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தும் தெரிவித்து, அதனை விருப்ப பாடமாக்கும் நிலையினை அரசாங்கத்துக்கு உண்டாக்கி இருக்கின்றனர். எனவே, மீண்டும் தமிழ் மக்களுக்கு இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

11. தமிழ் நாட்டில் இந்தி கட்டாய பாடமாவதை எதிர்த்துத் தமிழ் நாட்டின் பேரறிஞர்களான மறைமலையடிகளாரும், நாவலர் சோமசுந்தர பாரதியாரும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருப்பதோடு, 'இந்தியன் சோஷியல் ரிபார்மர்'

என்ற தாளின் ஆசிரியர் தோழர் நடராசன் அவர்களும், T. R. வெங்கட்டராம சாத்திரியாரும், T. T. கிருஷ்ணமாச்சாரியாரும், டாக்டர் ... ல் கலைக் கழகத் துணைத் தலைவர் இராமேச சந்திர மஜூம்தார் அவர்களும், இன்னும் பல மொழி வல்லுனரும், உலக அனுபவம் பெற்றவர்களும் தங்களின் ஆணித்திறமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். எனவே, தமிழ் மாணவர்களுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம்.

12. காந்தியடிகளின் சீடர்களில் குறிப்பிடத்தக்கவரான தோழர் வினோபாவே அவர்கள், வடநாட்டிலுள்ளவர்கள் தமிழ் மொழியை அவசியம் கற்கவேண்டுமென்று கூறியிருக்கிறார் ஆனால் தமிழ்நாட்டில் உள்ள காந்தியடிகளின் சீடர்கள் எவரும் தோழர் வினோபாவே கூறிய கருத்தை ஆதரித்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்குத் தங்கள் தமிழ் மொழி வளர்ச்சி அடையவேண்டுமென்பதில் விருப்பமோ, ஆர்வமோ இருப்பதாகவும் தெரியவில்லை, என்ற இந்த அசைக்க முடியாத அடிப்படைக் காரணங்களை எடுத்துக் காட்டியே தமிழ் நாட்டில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டாம் என்று கூறுகின்றோம்.

எனவே, சென்னை அரசாங்கம், இங்கு கூறப்பட்டுள்ள காரணங்களைப் புறக்கணித்துத், தமிழ் மக்கள் விரும்பாத இந்திக் கட்டாயக் கல்வி முறையைத் தமிழ் மாணவர்கள் தலையில் சுமத்துமானால், அது, தமிழ் மக்களை வலிந்து சவாலுக்கு இழுப்பது போலாகும் என்பதைச் சென்னை அரசாங்கத்துக்குக் கூறி, வேண்டாம் இந்த விரும்பத்தகாத திட்டம், விட்டுவிடுங்கள் என்று எச்சரிக்கிறோம்.

✲


கே ஆர். ராமசாமியின்

கிருஷ்ணன்
நாடக சபையாரின்

புதிய நாடகம்

சி. என். ஏ.
தீட்டிய

திருச்சி
ரத்னவேல் தேவர்
ஹாலில்
24—6—48 முதல்
நடைபெறுகிறது

★

# சந்திர மோகன்

[சரிதம் தழுவிய சிந்தனைச் சித்திரம்]

புஷ்லேக்தியின்
ஆர்ப்பரிப்பு!

பூபதியின்
திகைப்பு!

வீர சிவாஜியின்
★ மனப்போரை விளக்கும் ★
நாடகம்

வீரன்
விசாரம்!

வேதமோதியின்
வீம்பு!

இன்னும்
சில தினங்கள் மட்டும்
நடைபெறும்

## அவர்கள் உள்ளம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

எதையும் காணமுடியாது. அந்த வாளைக்கண்டு, ஒளியைக் கண்டு, மகிழமுடியாது. போர்க்களத்திலிருந்து திரும்பும் நமது சோதரரைக்காண முடியாது! மராட்டிய நாட்டிலே, மலர்ச்சி இருப்பதைப் பார்க்கமுடியாது! லோகாஜி! நமது ஜெயவீரசிம்மம் சிவாஜியைக் காண முடியாது, நான் ஏன வாழவேண்டும்? வீண்! வீண்!

லோகாஜி:- தேவாஜி! உனக்குமா சுயநல உணர்ச்சி! தியாக மூர்த்தியாகிய உனக்குத் தந்நலம் இருக்கலாமா? உன் கண்போனால் என்ன? நீ காட்சிகளைக் காணமுடியாது. அது தானே உன்குறை.

தேவாஜி:- நான் காண வேண்டாமா? நம் நாட்டு விடுதலை வீரர்களின் முகவிலாசத்தைக் காண வேண்டாமா? நாம் யார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம், மாற்றான் முன் மண்டியிடோம், மராட்டிய மண்டலத்திலே ஜெயக்கொடி நாட்டியே தீருவோம் என்று பரணி பாடும் வீரர்களைக் காணவேண்டாமா? லோகாஜி! பயிரிட்டகழனியிலே விளையும் மணியை, வளர்த்த மரத்திலே குலுங்கும் பழத்தை, பெற்றெடுத்த குழந்தை தவழ்ந்து விளையாடுவதைக்காண யார்தான் துடிக்க மாட்டார்கள்? களத்திலே ஊண் உறக்கம்மறந்து, உற்றார் பெற்றார் மறந்து, என் காதலியையும் மறந்து, நான் உலாவியபோது எதை எதைக் காணவேண்டுமென்று நினைத்தேன் தெரியுமா? மராட்டிய வீடுகளிலே மகரதோரணங்களை! ஊருக்குஊர் வானளாவப் பறக்கும் வெற்றிக்கொடிகளை! அக்கொடிகளுக்கு வீரவணக்கம் செய்யும் ஆடவரை! அவர்களை வாழ்த்தி வரவேற்கும் ஆரணங்குகளை! அனைவரும் சென்று வணங்கும், அஞ்சா நெஞ்சன் சிவாஜி அரியாசனம் ஏறுவதை! இவைகளைக் காண எண்ணினேன்.

லோகாஜி:- எண்ணினாய்!கண்ணை இழந்தாய், காணமுடியாது. ஆனால் கவலையைவிடு தேவாஜி! நீ காண வேண்டுமென்ற காட்சிகள், மராட்டிய மண்டலத்திலே அமைக்கப் பட்டுவிட்டன. மகிழ்ச்சிதரும் செய்திகளைக்கேட்க உனக்குச்செவி இருக்கிறது. காட்சிகள் எப்படி இருக்குமென்று யூகித்துக்கொள்ளச் சிந்தை இருக்கிறது, உயிரை விடுவானேன் உத்தமனே! ஒப்பற்ற தியாக புருஷனாகிய உன்னைக் கண்டால் அன்றோ மராட்டிய மண்டலமே எழுச்சியுறும். நீ இறக்கலாமா? இலட்சிய புருஷனாக வாழ்ந்திரு! மராட்டியப் புது யுகத்தின் தூதனாக இரு, நீ காண முடியாது காட்சிகளை, ஆனால் உன்னை மராட்டியர் காண முடியும், உன்னைக் கண்டால் அவர்கள் எவ்வளவு பெருமை அடைவர்! உன் உருவம், கோழையை வீரனாக்கும். உன் வரலாறு பூனையைப் புலியாக்கும், போரிலும் கண் இழந்த நீயும், கால் இழந்த நானும், உடல் உறுப்பு ஏது இழந்தவனும் இன்று மராட்டியத்துக்குத் தேவை! கருத்து இழந்தவன தவிர மற்றவர்கள் யாவரும் தேவை! எல்லோருக்கும் வேலை இருக்கிறது எல்லோரும் தேசப் பணி செய்ய முடியும், ஓர் உறுப்புப் போனால் மற்றொன்றால்! இது விடுதலைப் போர்க்காலம், விசாரத்துக்குக் காலமல்ல, நாம் சாவதற்கு நேரம் இல்லை தேவாஜி! நாம் வாழ வேண்டும், நமது நாட்டை வாழ வைக்க.

[மீண்டும் சாணை இயந்திரத்தைச் சுற்றுகிறார்கள்.]

களம் சென்று போரிட்டு, கண்ணையும் காலையும் தாய்நாட்டின் விடுதலைக்குக் காணிக்கையாகத் தந்தனர் இவ் வீரர்கள். இனிக் களம் செல்ல முடியாது — எனினும், களம் செல்வோருக்குப் பணி புரிவதும், நாட்டுப்பணிதான் என்பதை உணர்ந்து, வாட்களைக் கூர்தீட்டித்தருகிறார்கள். நாட்டுப்பற்று மிக்க இவர்களின் தொண்டு இவ்விதமிருக்க, மராட்டியத்திலே மற்றோர் பக்கம், உயர் ஜாதிக் காரர்களின் உள்ளம் என்ன செய்துகொண்டிருந்தது, என்பதைக் கவனிப்போம்.

[வேம்புவும் சம்புவும் குளத்தங் கரையருகே, உட்கார்ந்துகொண்டு, ஜோதிட சாஸ்திர ஆராய்ச்சிப் பேச்சிலே ஈடுபட்டவண்ணமிருக்கிறார்கள்.

மரத்தடியிலே ,ஒரு சாது உட்கார்ந்துகொண்டு, சிந்தனையிலாழ்ந்தவராயிருக்கிறார்.

தொலைவிலே, சம்மட்டிச் சத்தம் கேட்டபடி இருக்கிறது.]

ச:- ஓய்! நாலாமிடத்திலே கேதுவும் மூணாமிடத்திலே சனியும் இருந்தா பலன் என்ன?

வேம்:- அப்படி இருக்கவே முடியாதே.

ச:- ஓய்! உமக்குச் சொல்லத் தெரியல்லேன்னா......... (சத்தத்தைக் கேட்டு முகத்தைச் சுளித்தபடி) இது வேறு பிராணனை வாங்கிண்டிருக்கா, தட்டு தட்டுன்னு தட்டிண்டு—உமக்குத் தெரியலேன்னா, தெரியாதுன்னு சொல்லிவிடும்—உம்முடைய ஞான சூன்யத்தை மறைக்க, ஏதேனும் சாக்குப் போக்குப் பேசற வித்தையை இந்தச் சம்புவிடம் காட்டவேண்டாம் — சொன்னேன், தெரியறதா........

வே:- ஓய், பாராசரர் உம்மிடம் பிச்சை கேட்கவேணும், அவ்வளவு பெரிய மேதாவின்னு உம்முடைய எண்ணம், தெரியறதே! ஆனா, அதை இந்த வேம்புவிடம் காட்ட வேண்டாம். (சத்தத்தால் வெறுப் படைந்து) அடாடடா! கொஞ்ச நேரம் விச்ராந்தியாக இருக்கவிடமாட்டா போலிருக்கே — என்னத்தைப் போட்டுத் தட்டிண்டிருக்கா. (மரத்தடியிலே உட்கார்ந்திருக்கும் சாதுவைப் பார்த்து) ஏ பண்டாரம்! காவி! காவி! (சாது சிந்தனையிலிருந்து கலைந்து அவர்கள் பக்கம் வருகிறார்) காது மந்தமோ?

சா:- இல்லையே........நான்........

ச:- ஏதோ கவலைபோ! சரி, அதோ, எவனோ என்னத்தையோ போட்டு தட்டிண்டு இருக்கான்—கர்ண கடூரமா இருக்கு—போய்........

சா!-(உற்றுக் கேட்டு) ஆமாம்— தட்டுகிறார்கள்—

ச:- எதையோ, எதுக்கோ, எவனோ! இங்கே நாங்க கொஞ்சம் வேதாந்த விசாரணையிலே ஈடுபட்டிண்டிருக்கோம், அந்தச் சத்தத்தாலே, மனம் கலைபறது-அதனாலே, போய், அந்தச் சத்தத்தை நிறுத்தச் சொல்லு, போ.

சா:- அந்தச் சத்தம் உங்கள் சித்தத்தைக் கலைக்கிறதா?

வே:- ஆமாம்—ஏண்டாப்பா, உனக்கு அதுவே சந்தேகமாயிடுத்தோ! ஏன், உன் காதிலே விழலியோ சத்தம்.

சா:- இப்போது விழுந்தது.

ச:- இப்போதா! இந்தச் சத்தம், ரொம்ப நேரமா இருக்கே—ஏன்

ஓய், நாம் பரப்பிரம்மத்துக்கும் அண்டசராசரத்துக்கும் என்னவிதமான சம்பந்தம் என்கிற விஷயமா பேச ஆரம்பிச்சோமே, அப்போ இருந்தே இல்லையோ.

சா!—இருந்திருக்கலாம்—ஆனால் என் காதிலே விழவில்லை—நான, ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருந்தேன். சித்தத்தை ஓரிடத்திலோ, ஓர் விஷயத்திலோ செலுத்திவிட்டால், வேறு சத்தமோ என்னமோ புகாதே!

வே:—ஓஹோ! ஹா ஹா மேதாவியோ—சரி, சரி, நீ. போ.

சா!—கோபம் ஏன் மறையவரே! அந்தச் சத்தத்தைச் சாமான்யமென்று எண்ணிவிட வேண்டாம். அது மராட்டிய மாதாவின் தளைகள் பொடிபட, வீரர்கள் போரிடும் ஆயுதக் கருவிகளைக் காய்ச்சி அடிக்கும் சத்தம். அந்தச் சத்தம் அதிகரித்தால் தான், வெற்றி முழக்கம் மராட்டியத்திலே!

வே!—அதிகப்பிரசங்கி!

சா:—வேத ஒலி, ஆலய மணி ஓசை, அர்ச்சனைச் சத்தம், இவைகள், எதிரிப்படைகளை ஓட்டவில்லையே........

ச!—நிரீஸ்வரவாதி ஓய் இவன், பச்சை நாத்திகன்—ஏ, பாபி! எங்களிடமா உன் பேச்சுப் பலிக்கும்!

ஓய்! வேம்பு! வீணாக இவனிடம் வார்த்தையாடவேண்டாம்.

வே:- ஓய்! இந்தமாதிரிப் பண்டாரக்கூட்டத்தார் சிலபேர், இப்போது இங்கே கிளம்பி இருக்கா — அவா, மராட்டியத்திலே, புதிய ஞானத்தைப் பரப்பப்போறாளாம்— பழைய ஐதிகத்தை ஒழிக்கப்போறாளாம்.!

ச:-நாலுஜாதி கிடையாதாம் ஓய் கிடையாதாம்! அந்தத் தர்மத்தைஏற்படுத்திய நான்முகனும் கிடையாதாம்! சர்வம் சூன்யமயம் ஜகத்! என்று பேசுகிறா, இதுகளோடெ விஷயம் நன்னாத்தெரியும்.

வே:- சொப்பனம்! காண்றா, சொப்பனம்! பழைய ஐதீகத்தை, இவாளாலே அசைக்கக்கூட முடியாது................

சாது:- நிந்திக்கும் நண்பர்களே!

வே:- ஏய்! என்ன திமிரடா, உனக்கு! எங்களை நண்பர் என்று பேச..................நாக்கு அழுகிப் போகும்..............நாசமாகி...........

ச:- எல்லாம் சமம்—ஜாதிபேதம் கூடாது — பக்திதான் பிரதானமே ஒழிய பிராசீன தர்மம் முக்கியமில்லே..............இதுதானே உங்க கூட்டம் இப்ப பேசிண்டிருக்கிறது.

சா:- ஆமாம்—இவ்வளவேதான்- இதுவா நாத்திகம்

வே: எந்த ஈகமானு இருக்கட்டும்—இது சாத்யமா? பிராசீன தர்மத்துக்காக, தவச்சிரேஷ்டாள், எவ்வளவு தர்ம சாஸ்திரங்கள், ஸ்மிருதிகள், ஏற்பாடு செய்திருக்கா—அடே, அஞ்ஞானி! அவாளெல்லாம் திரிகால ஞானிகளல்லவா! அவாளுடைய ஏற்பாட்டைக் கெடுக்க உன்னாலே ஆகுமா ?

சா:- அந்தத் திரிகால ஞானிகள் இப்படி ஒருகாலம் வரும், நமது ஜென்மபூமியில் லோகாயத ராஜங்கம் ஏற்படும்னு, ஒரு வார்த்தை சொல்லவில்லையே, ஸ்வாமிகளே! அவ்வளவு வேதபுராண இதிகாசாதிகளிலும்.

வே:- முட்டாள்! வேதபுராணாதிகளெல்லாம், இந்த அல்பகாரியத்துக்காக அல்ல.

ச:- மோட்ச சாம்ராஜ்யத்துக்காகக் கூறப்பட்ட ஞானமார்க்கம்.

சா:- அதை நான் மறுக்க வரவில்லையே! நானும் மற்றவர்களும் ஜாதி கூடாது, பேதம் கூடாது, சமரசம் வேண்டும், என்று பேசுவது, மராட்டியசாம்ராஜ்யயத்துக்கு .................. மனிதசமாதானத்துக்கு.

வே:- வாரும் ஓய்! இவாளோடு, பேசுவதே பாபம்! ஆளைப்பாரும் ஆளை, எப்படி இருக்கான், போய்ப் பட்டாளத்திலே சேருவதுதானேடா ...............படையிலே இருக்கவேண்டியவன், பண்டாரமாகத் திரிகிறாயே .....................

சா: நான் படையிலேதான் இருக்கிறேன்-அறிவுப்படையில்

வேம்பு }
சம்பு } (கேலியாக) அறிவுப் படையில.

(போகிறார்கள்)

(சாது மெள்ளச் சென்று பார்க்க உலைக்களத்தருகே ஆயுதங்களைக் காய்ச்சி அடிக்கிறார்கள்.)

ஆயுதங்களைக்காய்ச்சி அடிக்கும் சத்தமே, சம்பு வேம்புகளுக்கு, காதில் நாராசமாக இருக்கிறது! சாது, கூறுகிறார், அந்தச் சத்தம் தானய்யா, நாட்டு விடுதலைக்கான சத்தம், என்று. 'ஐயர்கள்'—அதைக் கேட்டுச் சடுகோபம் கொள்கிறார்கள்!! அவர்கள் மனம் அவ்விதமிருக்கிறது!! ✳

## பத்திரிகைத்தாள்

பத்திரிகைத் தாள் உற்பத்திசெய்வது சம்பந்தமாக இந்தியக் காட்டு ஆராய்ச்சிக் கழகத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் திருப்திகரமான பலனளித்திருக்கின்றன. இந்திய மூங்கிலையும், காகித முசுக்கட்டைச் செடியையும் கொண்டு, இந்திய ஆலைகளில் தயாரிக்கப்பட்ட காகிதச் சுருள்களை பெரிய "ரோடரி" யந்திரத்தில் ஓட்டிப் பார்த்ததில் திருப்திகரமான பலன் கிடைத்திருக்கிறது. அகலமான, இலைகள் கொண்ட மிருதுவான மரங்களை காகித உற்பத்திக்கு உபயோகிப்பது பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. ✳

கோவையில்
"திராவிடநாடு" கிடைக்குமிடம்

தோழர் மொய்தீன்குட்டி
அவினாசி ரோடு.

தோழர் நாராயணன்
பெரிய கடை வீதி

தோழர் அப்துல் ரஜாக்
ராஜ வீதி

பாரதி கலா நிலையம்.
ஆர். எஸ். புரம்.

S. மீனாட்சி சுந்தரம்.
ஏஜண்டு—கோவை.

விற்பனைக்குத் தயார்!
"பிள்ளையோ பிள்ளை!"
'முரசொலி' மு. கருணாநிதி தீட்டியது
விலை 6 அணா
விற்பனை கழிவு 20%
V. P. சார்ஜ் எமது!
S. நெடுமாறன்
விந்தியம் வெளியீடு
திருவாரூர்.

# கடவுள், சிவன்—ஒரு விளக்கம்

—●—

இன்றைய மதப்புலவர்களால் தங்கள் மதத்தின் தலைவனாக வைத்துப் பேசப்படும் 'கடவுள்' என்ற சொல்லுக்கு அவர்கள் விரிக்கும் பொருள் வேடிக்கையாகவே உள்ளது. கடவுள் என்ற சொல்லுக்கும், அவர்கள் அதற்குக் கூறும் பொருளுக்கும் உள்ள வேறுபாடு, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாட்டைவிட மிகப் பெரியதாகும். அதனை இப்போது விளக்கிக் காட்டுவது இன்றியமையாததாக இருக்கிறது. கால மாறுதல், இத்தகைய உண்மைகளை அறிய வேண்டுமென்ற ஆர்வத்தை உண்டாக்கிவிட்டது.

கடவுள் என்ற சொல்லுக்கு, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் ஒரு மெய்ப்பொருள் அல்லது மெய்யுணர்வென்பதே பொருளாகும். இத்தகைய சிறந்த கருத்தமைந்த கடவுள் என்ற சொல், தமிழைத் தவிர வேறெம்மொழியிலும் அமையவில்லை. வேறுமொழியாளர் எல்லாரும் இம் மெய்யுணர்வைக் குறிக்கும் சொல்லுக்கு வழங்கிவரும் பெயர்கள், அப்பொருளைக் குறியாது வேறு வகையில் பொருள் தந்து நிற்கின்றன. அவையெல்லாம் தனிப்பட்ட ஒருவனையோ — ஒருத்தியையோ—ஒன்றையோ குறிப்பிட்டு நிற்கின்றனவே யன்றித், தமிழிற் காணப்படுவது போல மக்கள் அனைவர்க்கும் பொதுவான மெய்யுணர்வைக் குறித்து நிற்பனவாயில்லை. எடுத்துக்காட்டாகச், சைவ மதத்தையும் அதன் தலைவனான சிவனையும் கவனிப்போம். இந்த மதம் 'இருக்கு' முதலான வேதங்களில் காணப்படுவது — சைவமத ஆசிரியர்களான சம்பந்தர், சுந்தரர், அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோரால் புதுப்பிக்கப்பட்டது 'திருக்கயிலாய' பரம்பரைத் திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரி முதலான மடங்களின் தம்பிரான்மாரால் பாதுகாக்கப்படுவது. இச்சைவ சமயத்துக்குத் தலைவனாகப் பேசப்படும் 'சிவன்' என்ற சொல், சிவப்பு நிறமுடைய ஒருவனை அல்லது செந்நிறமான நெருப்பைக் குறித்துச், செந்நிறமுள்ள ஒருவனை அல்லது ஒன்றன் பெயராகப் பொருள் தந்து நிற்கின்றதேயன்றிக், கடவுள் என்ற சொல்லுக்கு அமைந்திருக்கும் மெய்ப்பொருள் அல்லது மெய்யுணர்வு என்ற பொருளில் அது அமையவில்லை.

இனிச், 'சிவன்' என்ற சொல்லுக்குச் செம்பொருள் அதாவது செம்மையான பொருளெனக் கொண்டு மயங்குவாரும் உண்டு. அவருரையும் போலியென்பதையும், வலிந்து கொள்ளும் பொருள் என்பதையும் விளக்குவாம். திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் கூறியுள்ள,

> "பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
> சிறப்பென்னும், செம்பொருள்
> காண்பதறிவு"

என்ற இக்குறள் வெண்பாவில் வரும் 'செம்பொருள்' என்ற சொல்லைச் சிவனுக்கு ஏற்றி, அவனைச் செம்மையான பொருளில் வைத்து வழங்குவர். ஆனால், திருவள்ளுவர் கூறிய செம்பொருள் என்பது சிவனைக் குறித்துச் சொல்லப்பட்டதன்று. பிறப்பினால் உண்டாகும் அறியாமையினின்றும் நீங்கிச், சிறப்பைத் தருகின்ற செவ்விய பொருளை அதாவது பகுத்தறிவைப் பெற்று, அதன்படி நடப்பதே அறிவெனப்படும் என்பதே இக்குறளிற் கூறப்படும் உண்மையாகும். ஒருவன் பிறக்கும்போது அறியாமையோடு பிறக்கின்றான்; பின்னர் அவனுக்குப் படிப்படியாக அறிவு உண்டாகின்றது. அதன் பின்னர், தான் அறிந்தவற்றை உணரும் பகுத்தறிவு உண்டாகின்றது. இப்பகுத்தறிவானது அறிவுக்கறிவாய் நின்று அவனை நல்வழியிற் செலுத்துகின்றது. ஆகையால் ஒருவனுடைய பொது அறிவுக்குச் சிறப்புத்தந்து, அவனை நல்வழியிற் செல்லும்படி செய்வதாகிய பகுத்தறிவின்படி நடப்பதே அறிவெனப்படும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இந்த உண்மைப் பொருளை அறியாதவர்கள், தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்பப் பொருள் கொண்டு மயங்குவர்—தாம் கூறுவதே சரியெனவும் வாதிடுவர்— உண்மையை உணர்த்தினாலும் ஒப்புக்கொள்ளாதிருப்பர்.

அன்றியும், 'சிவன்' என்ற சைவ சமயக் கடவுளைக் குறிக்கும் சொல்லானது, 'கந்தன்', 'இராமன்' என்ற சொற்களைப்போல ஒரு ஆண்பாலைக் குறித்து நிற்கின்றதேயன்றிக், 'கடவுள்' என்ற சொல்லைப் போல ஆண் பெண் என்ற இருபாலையும் குறித்து நின்று, அவர்களுக்குப் பொதுவாக அமைந்துள்ள மெய்யுணர்வை விளக்கும் ஒரு பொதுச் சொல்லாகவும் அது அமையவில்லை. இவ்வாறே மெய்யுணர்வைக் குறிக்கும் வேறு மொழியாளர் சொற்களும் அதனதன் கருத்தில் மாறுபட்டு நிற்பதைக் காணலாம்.

இனிச், சிவன் என்ற சொல் ஒரு கடவுளைக் குறித்த பெயரல்ல என்பதற்கு இன்னுமொரு மறுக்கமுடியாத சான்று காட்டுகின்றோம். அதாவது, பண்டைக்காலத் தமிழ் மக்கள் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்து, உலகுக்குப் பயன்படும் நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்ற உயர்ந்த பண்பினைப் பெற்றிருந்தனரென்றும், அங்ஙனம் உயிர் வாழ்வதற்கு அவர்கள் பல உடற்பயிற்சிமுறைகளைக் கையாண்டு வந்தனரென்றும் பண்டைய தமிழ்ச் சான்றோரின் வரலாறுகளால் அறியக் கிடக்கின்றது. அங்ஙனம் அவர்கள் கையாண்ட உடற்பயிற்சி முறைகளில் வளிநிலை (பிராணாயாமம்) என்பதும் ஒன்றாகும். அதாவது உள்மூச்சு, வெளிமூச்சு என்னும் இருவகை மூச்சுக்களையும் முறையே உயிர்ப்பது (சுவாசிப்பது). இவற்றுள் உள்மூச்சு ஒரு மடங்கும், வெளிமூச்சு ஒன்றரை மடங்குமாகும், எனவே உள்மூச்சினும் பார்க்க வெளிமூச்சு அதிகம் செல்வதால் ஒருவனுடைய வாழ்நாட்களின் அளவும் குறைந்து போகின்றது. ஆகையால், இவ்விரு மூச்சுக்களையும் கூடுதல் குறைதல் இன்றிச் சமமாக்கிவிட்டால் வாழ்நாள் நீடிக்கும் என்பதைப் பண்டைத் தமிழ்மக்கள் அறிந்திருந்தனர். அவர்கள், தங்களுடைய அறிவை, இன்றுள்ள சிலரைப்போல் தவறான வழியில் செலுத்தித் தடுமாறாமல், ஒழுங்கான முறையில் பயன்படுத்திப் பயன் காணும் பண்பினைப் பெற்றிருந்தனர் என்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

இனி, அவர்கள், 'வாழ்வாவது மாயம்-இது மண்ணாவது திண்ணம்' என்ற மதபயக்கத்துக்கு ஆளாகாமல் வாழ்வாவது மானம்-இது மண்ணாவது பொய் என்ற சிறந்த நோக்கத்தோடு இருந்து தங்கள்வாழ்க்கையை நடத்தினர். எனவேதான் அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்வதற்காகக் கையாளப்பட்ட வளிநிலைப் பயிற்சிக்கு இரு மூச்சுக்களையும் சமப்படுத்தும் முறையில் 'சி,வ' என்னும் இரண்டு எழுத்துக்களையும் கருவியாக வைத்து ஒலித்துக்கொள்ளும்படியான முறையினைக் கண்டுபிடித்தார்கள்.

இயல்பாகவே குறுகியும் நீண்டுமுள்ள உள்மூச்சு வெளிமூச்சுக்கள், குறிலும், நெடிலுமாகவுள்ள 'சி-வா' என்னும் இரண்டெழுத்துச் சொல் போன்றனவென்று, இந்தச் 'சி-வா' என்னும் சொல்லிலுள்ள கடையெழுத்தான 'வா' என்னும் நெடிலை 'வ' என்று குறிலாக மாற்றிச் "சிவ" என ஒலித்தால், இருவகை மூச்சுக்களும் சமப்பட்டுவிடுமென்றும், அவ்வாறு இருவகை மூச்சுக்களையும் சமப்படுத்தி ஒலிப்பதால் உடல் உரமும் ஆயுள் நீட்டிப்பும் பேணப்படும் என்றும் அறிந்த முன்னோர், அங்ஙனம் செய்து அதனால் தமக்கும் பிறர்க்கும் பயனுடையராய் வாழ்ந்தனர்.

இச்சிறந்த முறையை முதன்முதல் கண்டுபிடித்தவர், தலைச்சங்கத்திறுதித் தலைவனாய் இருந்த ஒரு தமிழ்ப் புலவர் என்பதும், அவர் வளிநிலைப் பயற்சி (பிராணாயாமம்) செய்யும் போதெல்லாம் 'சி-வ' என்னும் இரண்டு எழுத்துக்களையும் உச்சரித்துக் கொண்டிருந்த காரணத்தாலேயே அவர் 'சிவன்' என அழைக்கப்பட்டார் என்பது நன்கு அறியக்கிடக்கின்றது. சடை வைத்திருப்பவரைச் சடைச் சாமி என்றும், 'ஓம்' என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பவரை ஓ சாமி என்றும், கண்ணாடி போட்டிருப்பவரைக் கண்ணாடிக்காரர் என்றும் மக்கள் அழைப்பது போலவே, 'சிவ, சிவ' என்று உச்சரித்துக் கொண்டிருந்த தலைச்சங்கத் தலைவனையும் 'சிவன்' என்ற பெயரால் அக்காலத் தமிழ்மக்கள் அழைத்தனர் என்றுணர்க. உதாரணமாக, அவிநாசிலிங்கம் என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். அவர் பிறந்த ஊர் கோயமுத்தூர். கோயமுத்தூருக்கு அண்மையில் அவிநாசி என்றவூர் இருக்கிறது. அவிநாசி என்ற ஊரில் ஒரு சிவன் கோயிலும், அது சமயாசிரியர்களால் பாடப்பெற்றும் இருந்ததால், அந்த ஊர் மற்றை ஊர்களைப் பார்க்கிலும் பலரால் அறியும் நிலைமை உண்டாக்கப்பட்டது. எனவே கோயமுத்தூரில் பிறந்த ஒருவருக்கு அவருடைய பெற்றோர்கள், தங்கள் ஊருக்குப் பக்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அவிநாசிஎன்ற ஊரிலுள்ள சிவனைக் குறிக்கும் இலிங்கம் என்னும் பெயரை அவிநாசி என்ற ஊருடன் இணைத்து அவருக்கு அவிநாசிலிங்கம் என்று பெயரிட்டனர். கோயமுத்தூருக்குப் பக்கத்தில் அவிநாசி என்ற ஊரும், அந்த ஊரில்ஒரு சிவன் கோயிலும் இருந்திராவிட்டால் அவருடைய பெயர் அவிநாசிலிங்கம் என்று இராதல்லவா. இதுபோலவேதான, 'சிவ, சிவ' என்று ஒலித்துக் கொண்டிருந்த முதற் சங்கத்துப் புலவனையும் 'சிவன்' என்ற பெயரால் அக்காலத் தமிழ் மக்கள் அழைத்தனர் என்று கொள்க.

இனி, இருவகை மூச்சுக்களையும் சமப்படுத்திக் கொள்வதால், ஆயுள் நீடிக்கும் என்ற உண்மையினைத் திருமூலர்,

> "வளியினை வாங்கி வயத்தில் அடக்கிற், பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்"

என்ற பாடலால் விளக்கிக் காட்டியுள்ளார்.

இனி, இஞ்ஞான்றைச் சைவர்களால் ஒலிக்கப்பட்டு வருஞ் 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்துக்கொண்ட சொல், தமிழுக்கும் தமிழருக்கும் மாறுபட்டதாம் என்பதும் இங்கு கருதிப் பார்க்கவேண்டியதாகும். எப்படியென்றால், 'சிவா' என்னும் சொல்லுக்கு அடுத்துவரும் 'ஆய' என்னும் நான்காம் வேற்றுமை உருபும், 'நம' என்னும்வழிபாடு குறித்த சொல்லும் வடமொழியாகும். தமிழ் மக்களுக்குச் சிவவழிபாடும், அது குறித்த 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்தும் உண்மையாகவே இருந்திருப்பின், அது, 'சிவ போற்றி' என்பது போன்ற தமிழ்ச் சொல்லாய் இருக்குமேயன்றிச், 'சிவாயநம' என்ற வடமொழிப் பெயராய் ஒருபோதும் இருக்கவே இருக்காது. எனவே வடமொழியாளர் தமிழ் நாட்டுக்கு வந்தபின் தங்கள் பிழைப்பிற்காகச் சங்கப்புலவனாகிய சிவன் பேரால் எடுக்கப்பெற்ற நினைவுக்கற்களைக் கடவுளாக்கி, கோயில்களும் வழிபாட்டு முறைகளும் ஏற்படுத்திய பின்னர்தான், சிவன் ஒரு கடவுள் என்றும், அவன் வணக்கத்திற்குப் பயன்படுத்தும்மந்திரம் 'சிவாயநம' என்றும் கற்பித்துத் தங்கள் பிழைப்பிற்கு வழி தேடிக் கொண்டனர். எனவே, சிவன்என்னும் சொல் ஒரு கடவுளைக் குறித்த பெயராகாதென்பதும், அது தலைச் சங்கப் புலவனுக்கு இட்டழைக்கப்பட்ட காரணப்பெயர் என்பதும் யாதொரு ஐயுறவுமின்றி ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

இனி, மெய்யுணர்வு என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்கின்றதென்றால், அதற்கும் நமக்குமுள்ள தொடர்பு யாதோ என்று அச்சமோ ஐயுறவோ கொள்ளவேண்டியதில்லை. இங்கு கடவுள் என்றபெயரில் வரும் மெய்யுணர்வு, எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி நின்று, பக்குவம் வருங்போது வெளிப்படுகின்றதென்பதே பொருளாகும். அதாவது, ஒருவனுக்கு இயல்பாகவுள்ள மெய்யுணர்வானது, அவனுடைய முயற்சியால் எல்லாவற்றையும் செய்துமுடிக்கும் ஆற்றலையுடையது என்பதாகும். இதுபற்றியே திருவள்ளுவரும்,

> "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்"

என்றும் கூறியுள்ளார். திருவள்ளுவர் காலத்திலேயே கடவுள் என்ற தனிப்பொருள், அறிவை விடப் புறம்பாக எங்கோ இருக்கின்றதென்னும் கொள்கை தோன்றி, அவராலேயே எல்லாச் செயல்களும் நிகழ்கின்றன என்ற மதப்பிரசாரம் உண்டாக்கப்பட்டு விட்டதாயினும், திருவள்ளுவர் அதனைப் பொருட்படுத்தாது, முயற்சியையே முதன்மையாக வைத்துப் பேசியுள்ளார்.

இங்ஙனம் ஒருவன் தன்னுடைய முயற்சியால், எல்லாவற்றையும் தன் மெய்யுணர்வில் அடக்கிச் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவன் என்பதைக் குறிக்கும் கடவுள் என்ற சொல்லை, வேத-புராண—இதிகாசங்களிற் பேசப்படும் போலிக் கடவுளோடு ஒப்பிட்டுத் தங்கள் பகுத்தறிவை இழந்து நிற்கும் ஒரு கூட்டத்தார், தாமகள் மெய்யுணர்வுள்ளவர்கள் என்றுசொல்லித் திரிவதுமன்றி, அப்போலிக் கடவுட் கொள்கையை நாட்டில் பரப்பும் மதப்பிரசாரத்துக்

கும் துணைசெய்கின்றனரே! என்னே இவர்தம போக்கு!!

"அறிவே கடவுள்"
"அன்பே கடவுள்"

என்று தாயுமானவர், திருமூலர் போன்ற தமிழ்ப் பெரியார்கள் கூறியிருப்பதையும் இவர்கள் உணர்வதில்லை. மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் ஒரு இனத்தவரே, அவர்களிடம் அமைந்துள்ள அறிவும் ஒரு தன்மையதே என்பதை உணர்த்தவே 'ஒன்றே குலமும் ஒருவனே கடவுளும்' என்ற முதுமொழியும் எழுந்ததாகும். ஆனால், மக்களின் அறிவை மயக்க எழுந்த வேத-புராண-இதிகாசங்கள் இந்த உண்மையை மறைத்து, நாட்டில் பலசாதி இனங்களையும், பற்பல கடவுளரையும் உண்டாக்கி, அதற்கு வேறு பொருள் கொள்ளும் நிலைமையை உண்டாக்கிவிட்டன. சுருங்கச் சொல்லவேண்டுமானால், வேத-புராண—இதிகாசங்களே மக்களின் மெய்யுணர்வை அழித்து, அவர்களுக்கு மூட நம்பிக்கைகளையும், அடிமை உணர்ச்சியையும் உண்டாக்கி விட்டனவாகும். இதனால் அறிவை விளக்கும் சங்க நூற்கள் இருக்கும் இடந்தெரியாமற்போயின. இந்நிலையில் வேதாகமங்களின் சாரமாய் எழுந்த தேவாரம்-திருவாசகம்-திருவாய்மொழி முதலான அறிவை மயக்கும் நச்சுப் பூண்டுகள் தோன்றித், தொல்காப்பியம்—திருக்குறள் பரிபாடல்—அகநானூறு—புறநானூறு—கலித்தொகை — பத்துப்பாட்டு—நற்றிணை—குறுந்தொகை-ஐங்குறுநூறு—பதிற்றுப்பத்து முதலான அறிவுச் செழும் பயிர்களை வளர்ந்தோங்க விடாது மூடிப் படர்ந்து விட்டன.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்"

என்று வள்ளுவர் கூறியபடி, அறிவுச் சுடர் கொளுத்தும் பைந்தமிழ்ப் பயிர்களை மூடிப் படர்ந்திருக்கும் நச்சுப் பூண்டுகளைக் களைந்தெறிந்தாலன்றி, அவை வளர்ந்தோங்கி உரிய பயனைத் தரா.

இனிச், சைவமதத்தின் 'சிறப்பு' நூல்களான தேவார—திருவாசகங்களையும் நாம் குறைகூற முற்பட்டு விட்டோமே என்று சிலர் கருதக்கூடும். ஆனால், அவை தமிழ் மக்களுக்குப் புறம்பானவை என்பது நாம் இங்கு எடுத்துக் காட்டும் மறுக்கமுடியாத காரணங்களால் நன்கு புலனாகும். அதாவது, தேவார திருவாசகங்களே சைவ மதத்திற்குரிய கடவுள் நெறிகளை விளக்கும் நூல்கள் என்றும், அவற்றைத் தமிழ்மக்கள் ஓதாதொழிதல் கூடாதென்றும் கூறுவோர், தேவார காலத்துக்கு முந்திய கடவுள் நெறி நூல்கள் எவை என்பதை விளக்க வேண்டுமன்றோ! தேவார காலத்துக்கு முந்திய கடவுள் நெறி நூல்கள் எல்லாம் கடற்கோள் ஏற்பட்ட காலத்தில் வெள்ளத்தால் அழிந்து விட்டன என்றும், அவற்றின் சாரமே தேவார—திருவாசகங்களாகச், சம்பந்தர் சுந்தரர் முதலான சமயாசிரியர்களின் திருவாக்கினின்றும் உருவெடுத்தன என்றும் சிலர் கூறுகின்றனர். அவருரையும் பொய் என்பதற்குத், தேவார திருவாசகங்கள் ஆரிய வேதங்களான இருக்கு-எசுர்-சாமம்-அதர்வம் என்பவற்றின் சாரமே என்று சைவசித்தாந்தத்திற்குத் தாய்நூலான சிவஞானபோதச் சிறப்புரையில் கூறப்பட்டிருப்பதே போதிய சான்றாகும்.

அதுவுமன்றிக், கடற்கோள் என்று சொல்லப்படும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 9000 ஆண்டுகள் ஆய்விட்டன என்று சிலரும், 5000 ஆண்டுகள்தான் ஆயின என்று சிலரும் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். எனவே கடற்கோள் ஏற்பட்டுத் தமிழ்நாட்டின் ஒருபகுதியும், அங்கே இருந்ததாகச் சொல்லப்படும் கடவுள்நெறி நூல்களும் வெள்ளப் பெருக்கால் அழிந்து போயின வென்று கூறப்படும் காலவரையறைகளில், பின்னதாகவுள்ள 5000 ஆண்டுகள்தான் ஆயின வென்பதையே உண்மையெனக் கொண்டு பார்த்தாலும், தேவார காலத்துக்கும் கடற்கோள் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் காலத்துக்கும் இடையே 3670 ஆண்டுகள் தொக்கி நிற்கின்றன. எப்படியென்றால், தேவார—திருவாசகங்களைப் பாடியவர்களின் காலம் இன்றைக்கு 1330 ஆண்டுகள்தான் ஆகின்றனவென்று அடங்கன்முறை வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

எனவே, கடற்கோள் காலத்துக்கும் தேவார காலத்துக்கும் இடைப்பட்ட 3670 ஆண்டுகளிலும் உயிர்வாழ்ந்து வந்த தமிழ்மக்கள், எந்தப்பாடல்களைக்கொண்டு இவர்கள் கூறுஞ் சிவனைப் பாடிவணங்கினார்கள் என்பதனைத் தேவார — திருவாசகங்களைக் குறைகூறக்கூடாதென்று கூறும் இஞ்ஞான்றைச் சைவமதத் தலைவர்கள் விளக்கிக் காட்டுதல் வேண்டுமன்றோ! மதப்பிரசாரம் செய்கின்றவர்கள், தங்களுடைய நிலையைச் சிறிதளவாவது கூர்மையாக்கிக்கொண்டாலன்றி, விழிப்படைந்த இன்றைய மக்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடைகூறமுடியாது போகுமே! சொல்வதையெல்லாம் அப்படியே கைகட்டி — வாய்பொத்தி நின்று கேட்கும் காலமல்லவே இது!

சைவசமய அன்பர்களான நந்தனார்—தாயுமானவர்—பட்டினத்தார்—அருணகிரி— இராமலிங்க அடிகள் — திருநாவுக்கரசர் முதலான தமிழ்ப்பெரியார்களின் முடிவு எப்படி ஏற்பட்டது என்று கேட்பார்களே! விளக்கம் கூறவேண்டுமே! நெருப்பில் தள்ளப்பட்ட பறையன்-பார்ப்பானாக மாறினான் என்ற தெனாலிராமன் கதைகளை இன்றைய விழிப்படைந்த உலகம் ஒப்புக்கொள்ளாதே! வரலாறுகள் கூறும் உண்மையென்ன? ஆராய்ச்சியாளர்களின் முடிவென்ன? என்று கேட்பார்களே! மதப்பிரசாரகர்களின் மக்கிப்போன புராணக் கதைகளால் மக்களை மயக்கவைக்க முடியாதே! புராணக்கதைகள் எல்லாம் கற்பனை என்பதை இன்றைய மதப்புலவர்களே ஒப்புக்கொள்கின்றனரே!

கடவுளைப்பற்றியும், மதத்தைப் பற்றியும், மதநூல்களைப் பற்றியும் மக்களிடையே எழுந்துள்ள ஐயப்பாடுகளை நீக்குவதற்கு, கடவுள்—மதம்—மதநூல்கள் பற்றி எந்தவிதமான ஆராய்ச்சியோ, கருத்துவேறுபாடோ கொள்வது கடவுளுடைய ஆணையை மீறி நடக்கும் பெருங்குற்றத்திற்கு ஆளாகவேண்டி நேரிடுமென்ற மதப்புலவர்களின் அச்சுறுத்தல், மக்களை மயக்கவைக்கப் பயன்படுமென்று எண்ணி, அதற்காக மதப்புலவர்களால் கையாளப்பட்ட முறைகள் எல்லாம் காட்டு நிலாப் போல் பயன்படாது போகவேதான், கடவுளைப்பற்றியும், மதத்தைப் பற்றியும் பலதிறப்பட்ட தத்துவ நூல்களை எழுதி, "கடவுள் இப்படிப்பட்டவர்—மதம் இப்படிப்பட்டது, கடவுளைப்பற்றி மதநூல்களில் கூறப்படும் கதைகளும் [illegible] கொள்ளும் கருத்துடையவை, அக்கதைகள் [illegible]

டவனுடைய உண்மையான தத்துவத்தை, ஆண்டவனை எளிதில் உணர முடியாத உங்களுக்கு விளக்குவதற்காக, ஆண்டவனை அறியும் 'அறிவு' பெற்றவர்களால் எழுதப்பட்டனவேயன்றி, அக்கதைகளை அப்படியப்படியே நடந்தன என்று நீங்கள் நம்புதல் கூடாது; அதற்குப்பொருள் அதுவன்று; இதுவேயாகும்" என்று மதப் புலவர்கள் தங்கள் 'திறமை'யைப் பயன்படுத்தி மக்களை நம்பவைக்கலாம் என்று எண்ணுகிற எண்ணத்துக்கும் ஏமாற்றத்தை அளிக்கும் காலம் இது. இதற்கு ஓர் எடுத்துக் காட்டு:-

"முருகன் என்ற பெயரில் ஒரு ஆண்டவன் தனியாக யாண்டும் இல்லை. பகலவ (சூரிய)னே முருகனாக வைத்துப் பேசப்பட்டான். காலைப் பகலவன் ஒப்புயர்வற்ற அழகுடையவனாகக் காணப்படுவதால், ஒரு அழகுள்ள வடிவம் பகலவனுக்குக் கற்பிக்கப்பட்டது. காலைப் பகலவன் கடலினின்றும் எழுந்து வருவதுபோல் காணப்படுவதால், கடலின் நிறமான மயிலை அவனுக்கு ஊர்தியா (வாகனமா)கக் காட்டப்பட்டது. பகலவனுடைய ஒளியை மயிலின் தோகைகளில் உள்ள பொன்னிறமான புள்ளிகளுக்கு ஒப்பிடப்பட்டது. பகலவன் விடியற்காலம் நமக்குத் தோற்றப்படுவதால், பகலவன் வருகின்றான்; தூங்கிக் கிடப்பவர்களே எழுந்திருங்கள் என்று கூறுவதற்கு இலக்காகவே அவனுக்குச் சேவற்கொடி கொடுக்கப்பட்டது. எனவே பகலவனுடைய சிறப்பையும் அதனால் மக்களும் பிற உயிர்களும் அடையும் அளவற்ற பயனையும் விளக்கவும், அவனை மக்கள் மறவாது போற்றவும் வேண்டுமென்பதற்காகவுமே இந்தச் சிறப்புப் பகலவனுக்குக் கொடுக்கப்பட்டதாகும். இதன்றிப் புராண இதிகாசங்களில் கூறப்படுவதுபோல ஒரு ஆண்டவன் முருகன் என்ற பெயரோடு இல்லவே இல்லை; அக்கதையை நம்பவேண்டாம்; யான் இங்கு கூறிய விளக்கமே அக்கதையின் உண்மைப் பொருளாகும்" என்று ஒரு புலவர் அடித்துக் கூறியிருக்கிறார்.

எனவே, பகலவனே முருகனான் என்று விளக்கம் கூறிய புலவரும் இன்று இருக்கிறார். அவரைப் பெரும் புலவர் என்று மதிக்கும் பல மதப்புலவர்களும் இருக்கின்றனர். முருகனைச் சிவனுடைய பிள்ளையாக்கிய கதையும் (கந்தபுராணமும்), அவனுக்கு ஆறு முகங்களைக் கற்பித்து ஒவ்வொரு முகத்தாலும் ஒவ்வொரு வேலையைச் செய்துமுடித்தான் அல்லது முடிக்கின்றான் என்ற விளக்கமும், இவ் விளக்கங்களை நாட்டு மக்களுக்கு விரித்துக் கூறும் மதத் தலைவர்களும் ஒருங்கே வாழக் காண்கின்றோம். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், பகலவனை முருகனாக்கிக் காட்டிய புலவரோ, முருகனைச் சிவனுடைய பிள்ளையாக்கி அவனுக்கு ஆறுமுகங்களைக் கற்பித்து, அவனால் சூரன் முதலாயினோர் வதைக்கப்பட்டனர்; உலகத்தை உண்மையிலேயே சுற்றி வந்தும் தனக்குப் பழத்தைக் கொடுக்காமல் தன் அண்ணனாகிய பிள்ளையாருக்கே பழத்தைக் கொடுத்தார் தந்தையாகிய சிவன் என்று கோபித்துக்கொண்டு பழநி மலையில் போய்க்குடியேறினார் முருகன்; வனத்தில் வேடனாகி—வேங்கை மரமாகிப்—பண்டாரமாகியும் வள்ளியைக் கைப்பற்ற முடியாமல், கடைசியில் கணபதியை அழைத்து யானையாகச் சென்று வள்ளியை அச்சப்படும்படி செய்து மணம் செய்துகொண்டார்; முருகனே சம்பந்தராகப் பிறந்து சமணத்தை ஒழித்துச் சைவத்தை நிலைநாட்டினார்; என்ற பல கதைகளை மக்களுக்குக் கூறி மதத்தை நிலைநாட்டும் புலவர்களோ ஒருவருக்கொருவர், ஆண்டவனைப் பற்றிய கதைகளில் தங்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளைக் கலந்து பேசி, யார் கூறுவது உண்மையென்று முடிவு கட்டாததோடு, அம்முடிவை மக்களுக்கு எடுத்துக் கூறி விளக்காததும் வேடிக்கையிலும் வேடிக்கையன்றோ!

இப்படியாக மதப்புலவர்கள், ஆண்டவனையும் மதத்தையும் மக்கள் நம்பவேண்டுமென்பதற்காகத், தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் கதை எழுதிவைத்து ஒருவருடைய கருத்து இன்னொருவருடைய கருத்தோடு ஒத்துவராமல் அவர்களுக்குள்ளேயே மயக்கத்தை உண்டு பண்ணுவது மட்டுமன்றி, அவற்றைக் கேட்பவர்களுக்கும் மயக்கத்தை உண்டுபண்ணி விடுகின்றது. எனவே கருத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற முறையில்—மக்களின் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய காரியங்களையே கால மாறுதலுக்கு ஏற்பச் செய்யுங்கள் என்று கூறுவதில் என்ன தவறு. எனவே இதுவரை கூறிய விளக்கங்களால், கடவுள்—சிவன் என்ற சொற்களின் பொருள் இன்னதென்று விளங்குமென நம்புகின்றோம்.

*


# அரிய நூல்கள்!

**1. "தீ பரவட்டும்"**

தோழர் அண்ணாத்துரை, சேதுப்பிள்ளை, நாவலர் பாரதியார், ஈழத்தடிகள் முதலியோர் நிகழ்த்திய இராமாயணச் சொற்போர்.

**விலை ரூ 1**

**2. 1858—1948**

இந்தியத் துணைக்கண்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் கையாண்ட சூழ்ச்சி முறைகளையும், அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும், திராவிடநாடு பிரியவேண்டிய அவசியத்தையும் விளக்குவது. C. N. A. எழுதியது.

**விலை ரூ 1**

ஏஜண்டுகட்கு 25 % கழிவு தரப்படும். அனுப்பும் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

**ஞாயிறு நூற்பதிப்பகம்**

28, அப்பலத்தாடுஐயர்மடத்து வீதி, பாண்டிச்சேரி.


Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street. Conjeeveram.